1231

1231/3-57

REGISTERED No. M. 6165. ந. பை. 13

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

## அக்டோபர் 1957.

OFFICE OF THE REGISTRAR OF ...
28 SEP 1957
MADRAS

| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| இன்னவனே காமில் நபி (ஸல்) அவர்களே | 1 |
| திருக்குர்ஆன் சாரசங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) | 9 |
| தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள் (ரஹ்மத் பாகவி) | 15 |
| திருச்சி: தப்லே ஆலம் பாஷா இந்தியா விஜயம் (டி. எப். ஆர். மஆலி ஸாஹிபு-பாகவி) | 20 |
| சிறைப் பறவை சிப்கத்துல்லா அல்லது கப்பு துலக்கிய தூயவர் | 24 |

... இஸ்லாம் ஆபீஸ் :
... ரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

JL
[illegible]
187867

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு
வருஷ சந்தா ரூ. 1–50
தனிப் பிரதி நயா பைஸா. 13

மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 2–00

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

---

தற்கலை பீர் முஹம்மது ஒலியுல்லா
அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய

## ஞானக் கோர்வை

இதில் மேற்படி ஒலி நாயகமவர்கள் அருளிய பிஸ்மில் குறம், ஞானப் பால், ஞானப்பூட்டு, ஞானப் புகழ்ச்சி, ஞான மணிமாலை, ஞானக்குறம், ஞானரத்தின குறவஞ்சி, ஞான ஆனந்தக் களிப்பு, திரு மெஞ்ஞான சரநூல், ஞான முச் சுடர்ப் பதிகம் முதலியன அடங்கி யிருக்கின்றன.

கலிகோ பைண்டு விலை ரூ. 3 – 80

கிடைக்குமிடம்:–

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்.
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ், 5.

# பத்ஹுல் இஸ்லாம்

அக்டோபர்—1957.


## "இன்ஸானே காமில்" நபி (ஸல்) அவர்களே!

சூரியன், சந்திரன், நட்சத்திரம் முதலியவைகளுக்கு அளிக்கப் படாத ஒரு 'நூரை' (பிரகாசத்தை), எல்லாம் வல்ல அல்லாஹு தஆலா, மனிதர்களுக்கு அருள் புரிந்து அளித்துள்ளான். மலை, மடு, வானம், பூமி, கடல் இவைகளுக்கு அளிக்கப்படாத ஒரு 'குத்ரத்தை' (சக்தியை), எல்லாம் வல்ல அல்லாஹு தஆலா, மனித இனத்துக்கு அளித் தருள் புரிந்துள்ளான். மலக்கு, ஜின், ஷைத்தான் முதலியவைகளுக்கு அளிக்கப்படாத 'தாகத்தை' (வல்லமையை), எல்லாம் வல்ல அல்லாஹு தஆலா, நம்மனித இனத்துக்கு அளித் தாதரித்துள்ளான்.

உலகப் படைப்பினங்கள் ஒவ்வொன்றும் ஒரேவிதத் தன்மையும், ஒரே வித் ஆற்றலும் தான் பெற்றிருக்கின்றன. சூரியனுக்குச் சுடர் கொளுத்தி உலகை தீக்ஷண்யப் படுத்தும் தன்மையை மட்டும் தான் இறைவன் அளித்துள்ளான்; சூரியனால் குளிர்ந்த ஜோதியை—தண்ணென்ற சீதளத் தன்மையை உலகிற்கு அளிக்க முடியாது. அவ்வாறே, சந்திரனால் ஒரு குறிப்பிட்ட இரவு நேரங்களில், குளிர்ந்த சீதள ஜோதியைத்தான் உலகிற்கு அளிக்க முடிகிறது. அதனால் சூரியனைப் போல், உஷ்ணமான தீப்பிரகாசத்தை அளிக்க முடிவதில்லை.

இவ்வாறே, மலக்குகள் ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்து கொண்டே இருப்பதற்காகத்தான் ஆண்டவனால் படைக்கப்பட்டுள்ளார்கள். ஜின்களும் ஷைத்தான்களும், உலகில் மறைந்திருந்து, தமக்கு ஆற்றலுள்ள ஒரு வகை குறிப்பிட்ட நல்ல காரியமோ கெட்ட காரியமோ மட்டும் தான் செய்து கொண்டிருப்பார்கள்.

மலைகள், ஒரே இடத்தில் ஸ்திரமாய் இருந்து, பூமிக்குப் பாரமாய் நின்று கொண்டே கிடக்கின்றன; சமுத்திரமானது, உயிரினங்களின் தாகத்தைக் கூட தீர்க்க முடியாத ருசியற்ற, உப்புக்கசிவு உள்ள உவர்ப்பு நீரை யுடையதாய், சதா ஓயாமல் அலைமோதிக் கொண்டிருப்பதாய் அமைந்து கிடக்கிறது.

இவ்வாறே தான் மற்றெல்லா சிருஷ்டிப் பொருட்களும், உயிரினங்களும், யாவும் ஒரு குறிப்பிட்ட ஆற்றலும் ஒரு வரம்புக் குட் பட்ட தன்மையும் பெற்று, தனக்கு இயற்கையாய் இடப் பெற்ற கடமையை மட்டும் செய்து கொண்டு கிடக்கின்றன. அந்தக் கட்டளையை மீறி நடக்க, அந்தப் படைப் பினங்களால் முடியாது; தன் இயற்கைப் போக்கையும் மாற்றிக் கொள்ள அவைகளால் முடிவதில்லை; அங்ஙனம் இயலவும் முடியாது.

ஆனால் மனித இனம், மகத்தான சிறப்பு உடைய, உயர் இனமாகும். மனிதனானவன், எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவுடைய குத்ரத் என்னும் மகா சக்தியையும், ருபூபிய்யத் என்னும் எஜமானத் தன்மையையும், கமாலிய்யத் என்னும் பரி பூரணத் தன்மையையும் வெளிப்படுத்தக் கூடிய பிரதி ரூபமாய் விளங்கிக் கொண்டிருக்கின்றான். அல்லாஹு தஆலாவுடைய சில தன்மைகளும், சில குணப்பாகுபாடுகளும், சில ஆற்றல்களும் மனிதனின் தன்மையில் அமைக்கப் பெற்றிருக்கின்றன. ஆண்டவன் தனக்குப் பிரதி நிதியாகவே, (கலீபா ஆகவே), மனிதனை உலகத்தில் படைத்திருக்கின்றான். ஆகவே "கலக்கல்லாஹு ஆதம அலா ஸூரத்திஹி" (ஆண்டவன் தன் தோற்றச் சாயலாகவே மனிதனைப் படைத்திருக்கின்றான்) என்று கூறப்படுகின்றது.

மேலும் மனிதருக்கு "அஷ்ரபுல் மக்லூக்காத்" (சிருஷ்டி இனங்களிலெல்லாம் சிரேஷ்டமானவன்) என்ற பட்டமும் அளிக்கப்பட்டிருக்கின்றது. எனவே மனிதன், மற்றெல்லாச் சிருஷ்டிப் பொருள்கள், சிருஷ்டி இனங்கள் செய்யும் காரியங்களை யெல்லாம் தானும் செய்யக்

கூடிய ஆற்றலும் தன்மையும் பெற்றிருப்பதோடு, 'அக்லிய்யத்' என்னும் பகுத்தறிவுத் தன்மையும் கிடைக்கப் பெற்றுள்ளான். எனவே, மனிதன் துணிந்து ஒரு காரியத்தை செய்யப் போகும் போது, அதனுல் உண்டாகும் பலாபலனை எண்ணிப் பார்த்து உணர்ந்து, ஒதுங்கிக் கொள்ளவும் அவனுல் முடியும். இவ்வாறே, ஒரு காரியத்தைப்பற்றி அவன் ஆற்றல் பெருதவனுக யிருந்து, பின்னர் அவன் பகுத்தறிவால் உணர்ந்து, அந்தக் காரியம் நம்மால் முடியும் என்று துணிந்து செயல் முறையில் சாதிக்கும் பரம இரகசியமான சக்தியும் இயற்கையாகவே பெற்றிருக்கின்ருன்.

இப்படிப்பட்ட ஆதார ஆதேயங்களால், மனிதன் மகாச் சிரேஷ்டமானவன் என்பது நன்கு விளக்கமாகின்றது. இதை 'இன்ஸானியத்' என்று சொல்லலாம். 'ஹைவானியத்' என்ருல் உயிருள்ள ஜீவப்பிராணிகள் சுய அறிவுகொண்டு, அல்லது சுய அறிவின்றி, இயற்கையாகவோ செயற்கையாகவோ செய்யும் காரியங்களை யெல்லாம் இன்ஸானுகிய மனிதனும் செய்து சாதிக்க சக்தி பெற்றிருக்கின்ருன். அத்துடன், தான் செய்யும் ஒரு காரியம் நல்லதா—கெட்டதா? தனக்குத் தகுதியானதா—தகாததா? இதனுல் தனக்கும் பிறருக்கும் நன்மையுண்டாகுமா— தீமை உண்டாகுமா? என்பதை யெல்லாம் உய்த்துணர்ந்து பார்த்து செயலாற்றும் சீரிய சக்தியும் தன்மையும் பெற்றவனுக இருக்கின்ருன. இதைத்தான் "இன்ஸானியத்" (மனுஷயத் தன்மை) என்று கூறுகின்ருேம். இந்த மானுஷ்யக் குணம் அவனில் மேலோங்கி யிருக்கும்போது அவன் இன்ஸானுக இருக்கின்ருன்; அந்தக் குணம் தாழ்ந்துப்போய் கீழே சரிந்து விடும்போது அவன் 'ஹைவான்' ஆய்விடுகின்ருன்.

எனவே, மனிதன் சில சமயம் மிருகமாகவும் மாறிவிடுகிருன்; பல சமயம் மனிதனுகவும் இருக்கின்ருன். மனிதன் மனிதனுகவே இருக்கும் காலமெல்லாம் அதாவது இன்ஸானியத் அவனிடம் குடிகொண்டிருக்கும் வரை ஆண்டவனுக்குப் பயந்து, ஒழுகி, புண்ணியமான நற்காரியங்களைச் செய்து கொண்டிருப்பான். இவ்வாறின்றி, கோபத்தாலோ, சூழ்நிலையாலோ, சகவாசத்தாலோ, அவன் 'இன்ஸானியத்' என்ற பதவியிலிருந்து நழுவி வீழ்ந்து 'ஹைவானியத்' என்னும் மாயச் சேற்றில் உழலுங்கால், அவன் மிருகங்களைப் போலாகி, பகுத்தறிவு இழந்து, ஆண்டவனை மறந்து, கடமை பிறழ்ந்து, மனம் போனபடி நடந்து, கெட்டுப்போய் பாபச் செயல்களைச் செய்கின்ருன்.

மனிதன் 'அஷ்ரபுல் மக்லூக்காத்' ஆதலால், அவன் தவறும் பாபமும் செய்து விட்டாலும், பிறகு மனம் திருந்தி, உள்ளம் நெக்குருகி, பாபத்திலிருந்து பேணி, நல்ல தன்மை பெற்று, பாபமன்னிப்பு என்னும் தவ்பா கோரி, ஆண்டவனுடைய நல்லடியானக மாறிவிடுகின்றான். ஆகவே, ஹைவானியத்தைவிட இன்ஸானியத்தே மனிதனில் எப்போதும் மேலோங்கி யிருக்கும்.

இன்றைக்கு 1417 ஆண்டுகளுக்கு முன்னே பொதுவாக உலகத்திலும் குறிப்பாக அரபு நாட்டிலும், மனித இனத்துக்கு அத்தியாவசியமாய் வேண்டிய இன்ஸானியத் குன்றி மறைந்துப் போய், எங்கும் 'ஹைவானியத்' என்னும் மெளடிகத் தன்மை தாண்டவமாடிக்கொண்டிருந்தது. அக்காலே மக்கள் மக்களாக விளங்கவில்லை. மாக்களாக காட்சி யளித்தனர். சன்மார்க்கம், நல்லொழுக்கம், சகோதரத்துவம், அன்பு, விசுவாசம், பாசம், பற்று என்பதெல்லாம் அற்றுப் போய் விட்டன. பாபம் இன்னது. புன்னியம் இன்னதென்று பாகு படுத்தி யுணரும் பகுத்தறிவுகூட அம்மக்களிடம் அப்போது அற்றுப் போய்விட்டது.

'அய்யாமே ஜாஹிலிய்யத்' என்னும் அந்த அறியாமைக் காலத்தில், அரபு ஜனங்கள் முற்றும் மிருகங்களை (ஹைவான்களை) ப்போல், அல்லது அதைவிடக் கேவலமாகவே நடந்து கொண்டனர். ஒரு தெய்வத்தைத் தொழுது வணங்குவதற்குப் பதிலாக, பல தெய்வங்களை பூஜித்து வந்தனர். வித விதமான உருவங்களையும் சிலைகளையும் மூர்த்திகளையும் செய்து வைத்துக் கொண்டு, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சக்தி இருப்பதாக நினைத்துக் கொண்டு, இஷ்டப்பட்ட காரியத்துக்காக இஷ்டப்பட்ட 'சுவாமி'களை வணங்கி வந்தனர். அவைகளுக்கு நரபலியும் கொடுத்து வந்தனர். இன்று 'கஃபத்துல்லா'வை மத்திய மூலஸ்தானமாகக் கொண்டுள்ள மக்காவின் ஹரம் பிராகார எல்லைக்குள்ள, ஆலயத்துள் 360 விக்கிரஹங்களை, அந்த ஜாஹிலிய்யத்தின் மக்களாகிய அரபுகள் பூஜித்து வணங்கி வேண்டி யுழன்று வந்தனர். இப்போது ஹாஜிகளாகிய நாம் 'தவ்வாப்' சுற்றி வருகிறோமே அந்த கஃபா என்னும் சதுர கூடத்தை, அக்கால அரபுகள், நிர்வாணமாகவே வலம் சுற்றிவந்து சுவாமிகளுக்கு நைவேத்திய பூஜைகள் செய்வார்கள். இம்மட்டுமல்ல, பரிசுத்தப் புனித ஸ்தலமாகிய அந்த ஹரம் எல்லையிலேயே கொலை, வெட்டு, குத்து, கலகம், யாவும் செய்து வருவார்கள்.

அரபுகள், பெண்கள் விஷயத்தில் மகாமோசமாக, ஹைவான்களாகவே நடந்து வந்தனர்.

இப்படிப்பட்ட அஞ்ஞான அந்தகாரச் சூறுவளியில் கிடந்து உழன்ற அரபுமக்களையும், அவர்களைச் சூழ்ந்தஇதர மக்களையும், இறைவனின் ஏக தெய்வத்துவம் என்னும் தவ்ஹீதுப் பிரகாசத்தில் அழைப்பதற்காக, எல்லாம் வல்ல அல்லாஹுத் தஆலா, அந்த அரப் நாட்டின் மத்திய நகரமாகிய மக்காவில் ஒரு "இன்ஸானே காமிலை" அவதரிக்கச் செய்தான்; அதாவது மனிதர்களிலே ஒரு மாணிக்கத்தைத் தேர்ந்தெடுத்து, அவரை சத்போதகர் என்னும் நபியாக ஆக்கி வைத்தான். அவர், தம் பிறப்பாலும், குலத்தாலும், குடும்பத்தாலும், இனத்தாலும், குணத்தாலும், பேச்சாலும், செயலாலும் உருவத்தாலும், சுபாவத்தாலும் மனிதருள் மாணிக்கமாய், மனுஷ்யத் தன்மையில் சிறந்தவராய், இன்ஸானியத்தில் காமிலானவராய் விளங்கினர். அவர் யார்? அவரே நாமெல்லாம் மனத்தாலும் வாக்காலும் உயிராலும் போற்றிப் புகழும் மகா மகா மகோத்தமரான நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாவர்.

"இன்னக்க லஅலா குலுகில் அளீம்" (ஏ நபியே, நிச்சயமாக நீவிர் மகா மேலான நற்குணம் மிக்கவரா யிருக்கின்றீர்) என்று, அல்லாஹு தஆலாவே, நந்நபி நாதர் (ஸல்) அவர்கட்கு நற்சாக்ஷியளித்துள்ளான். உண்மையில், ஒரு சமூகத்துக்கு வழி காட்டக் கூடியவர், அந்த சமூகத்தில் சிரேஷ்டமானவரா யிருக்க வேண்டும். அப்போதுதான் அவரது சொல் எடுபடும். பரிசுத்தமானவர், குற்றமற்றவர், வாக்கு வான்மையர், தூய மனத்தினர், நம்பிக்கைக்குரியவர், பக்தி சிரேஷ்டர், தன்னலம் பாராதவர், பிறர்க்காக பாடுபடுபவர், அரிய தியாகி, சீரிய ஊழியர், பெரிய தலைவர், நல்ல அறிவாளி, அன்பு நிறைந்தவர், அருள் உருவானவர் என்றெல்லாம் ஒருவர் பெயர்பெற்றிருந்தால் தான், அவரை மக்களும் உலகமும் 'மாபெரும் சீர்திருத்தகர்' (நபி, ரஸூல்) என்று ஒத்துக்கொள்ளும்; அவரது போதனைகளையும் காட்டும் வழிகளையும் மக்கள் ஏற்றுக்கொள்வர். அப்போது தான் அவரது சன்மார்க்கம் வெற்றி பெறும்.

மனுஷ்யத் தன்மையில் சிரேஷ்டத் தன்மையுடையவர்தான் 'இன்ஸானே காமில்' (மனுஷ்யப் பரிபூரணர்) ஆக விளங்குவார். அப்

படிப்பட்ட 'கமாலிய்யத்தே இன்ஸானியத்' நமது நபிகள் முஹம்மத் (ஸல்) அவர்கள் தன்மையில் முற்றமுற்ற முழுக்கமுழுக்கப் பொருந்தி யிருந்தது. ஆகையினால் அப்பெருமானார் (ஸல்) அந்த அரபு நாடு மக்களால் 'அல்அமீன்' (நம்பிக்கைக்குரியவர்) என்று ஆரம்ப காலத் திலே பாராட்டப் பட்டார். ஆகையால் தான் அவரது போதனைகளை மக்கள் செவியில் ஏற்றனர். ஆகையினால் தான், அவர் போதித்த 'அல்லாஹு அஹத்' (இறைவன் ஒருவனே) என்ற மூலக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டனர்.

மகான் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள், தமக்கு இறைவனால் வஹீ என்னும் பரம ஞான வெளிப் பாட்டின் மூலம் அருளப் பட்ட கட்டளைப்படி, தானும் நடந்து கொண்டு, பிறருக்கும் நற்போதனை புரிந்து வந்தார். ஆத்மார்த்த சன்மார்க்க விஷயத்தில் மட்டுமில்லை, உலகார்த்த வியவகாரங்களில் கூட, அப்பெருமானார் (ஸல்) அவர்கள், முதலில் தாம் நேர்மையாய் நடந்து கொண்டு பிறகே பிறர்க்கு அந் நேர்மையைப் பற்றிப் போதித்து வந்தார்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்ற குறள் மொழி ஈங்கு குறிப்பிடத்தக்கது.

"லிம தகூலூன மாலா தப்அலூன்" (நீங்கள் செய்து காட்டாத காரியத்தைப்பற்றி பிறருக்கு ஏன் சொல்லுகிறீர்கள்?) என்பது திருக் குர்ஆன் போதனை. இக்காலத் தலைவர்கள், மிம்பர் மீதும், பொது மேடை மீதும் நின்று, வாசாமகோசரமாய்ப் பேசி பிறஜனங்களுக் கெல்லாம் உபதேசம் (பிரசங்கம்) செய்வர். ஆனால் தாம் மட்டும் அம் மொழிகள் பிரகாரம் நடந்து கொள்ளமாட்டார்கள். இப்படிப் பட்டவர்களின் தலைமைத் தன்மை போன்றதல்ல, நமது நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் திருப்போதனை.

"என்னுடைய தொழுகையும், என்னுடைய (பக்தி ஒழுக்க) வழிபாடும், என்னுடைய முயற்சிகளும், என்னுடைய தியாகங்களும், நான் ஜீவித்துக் கொண்டிருப்பதும், நான் மரணித்துப் போவதும் எல்லாம், அந்த அல்லாஹ்வுடைய சன்மார்க்கத்துக்காகவே யாகும்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமக்கு ஆண்டவன் கட்டளை யிட்ட பிரகாரம் கூறி ஒழுகி வந்தார்கள்.

'தனக்கென வாழா பிறர்க்குரியாளர்' என, நபி மகான் (ஸல்) அவர்களின் வாழ்க்கை இருந்து வந்தது. அல்லும் பகலும் ஒவ்வொரு நிமிஷமும் ஆண்டவனுக்காகவே வாழ்ந்து வந்தார்கள்; இஸ்லாத்துக் காகவே பாடுபட்டார்கள்; மக்கள் நலனுக்காகவே தியாகம் புரிந் தார்கள். ஆகையால், பாராட்டப் பட்டார்கள்; போற்றப்பட்டார்கள். "இன்ஸானே காமிலாய்" ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள்-நமது நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள்.

ஆகையால்தான், இஸ்லாம் மதம் உலகிற் சிறந்த சன்மார்க்கமாய் சிறந்தோங்கி வருகிறது. முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் ஒருவர்தான் "இன்ஸானே காமிலாய்" பாராட்டப்படுகிறுர்கள். உலகம் உள்ளளவும் இஸ்லாம் தழைத்தோங்கும். மனுஷ்யச் சிரேஷ்டர் மகான் முஹம்மத் (ஸல்) அவர்களின் திருப்பெயர், குவலயமெல்லாம் இயங்கி ஒலித்துக் கொண்டிருக்கும். தினமும் ஐங்காலம், தொழுகையின் போதெல்லாம் "முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்" என்னும் இன்மொழியொலி, உலக முஸ்லிம்கள் எல்லோரின் ஆத்மாக்களுக்கும் அனுதினமும் புது உற்சாகத்தையும் ஊக்கத்தையும் தந்து கொண்டே இருக்கின்றது.

'பலகல் உலா பி கமாலிஹி...' அவர் தம் பரிபூரணத்தாலேயே மிகவும் உயர்ந்து விட்டார். அவரது ஒளியைக் கொண்டே சூரியச் சந்திரன் சுடர் பெறுகின்றன. அவரது சத்குணங்களெல்லாம் மிக அழகாய் விளங்கின. ஆதலின் அந்த மஹான் 'இன்ஸானே காமில்' மீது, நாம் சதா காலம் ஸலவாத் என்னும் ஆசி மொழி கூறிக் கொண்டே இருப்போமாக.

"அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மத்,
அல்லாஹும்ம ஸல்லி வஸல்லிம் அலைஹி"

# தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்

தமிழ் நாட்டு முஸ்லிம்களது நன்மைக்காக திருக் குர் ஆனின் தப்ஸீரை தமிழ் பாஷையில் மிகவும் விளக்கமாகவும், தெளிவாகவும், சங்கை பொருந்திய ஸுன்னத்து வல்ஜமாஅத்தின் உலமாக்களாலும் இமாம்களாலும் எழுதப்பட்ட தப்ஸீர்களை ஆதாரமாகக் கொண்டு, மிகப் பிரயாசையோடு யாவரும் ஆமோதித்து புகழத்தக்க விதமாய் விளக்கத்தோடு இத்தப் ஸீரை எழுதி அச்சிட்டு வெளியிட்டிருக்கிறோம்.

இந்த தப்ஸீரில் குர்ஆன் ஆயத்துகளை அறபியில் அழ காக எழுதி போட்டோ பிளாக் செய்யப்பட்டு தனித்தனியாக ஆங்காங்கு அமைத்தும் அதன் கீழ் சரியான தர்ஜுமாவும், தப்ஸீர் என்னும் விரிவுரையும், வியாக்யானமும், ஷஃனு நுஸூல் என்னும் ஒவ்வொரு ஆயத்தும் இறங்கிய காரணங் களும், அதற்கேற்ப ஹதீது, ரிவாயத்து, ஹிக்மத்து, பாயிதா, கிஸ்ஸா, அஜீபா முதலிய அரும் பெரும் ஆதாரங்களும் ஒருங்கே சேர்த்து அமைக்கப் பெற்றிருக்கின்றன.

**முதல் பாகம்:** இந்த தப்ஸீர் ஸூறத்து பாத்திஹா—பக ருவி லிருந்து ஸூறத்துன்னிஸா முடிய (ஒரு மன்ஸில்) $5\frac{1}{4}$-ஜுஸூ வரை இதன் விலை ரூ. 10 – 00

**இரண்டாம்பாகம்:** சூறத்துல் மாயிதா முதல் ஸூறத்துத் தௌபா முடிய (சுமார் 5-ஜுஸூ) இரண்டாம் பாகமாக வெளிவந்திருக்கிறது. இதன் விலை ரூ. 10 – 00

**மூன்றும்பாகம்:** சூரே யூனுஸ் முதல் ஸூறத்துந் நஹல் முடிய 7-சூறுக்களின் தப்ஸீர் மூன்றும் பாகமாக வெளிவந் திருக்கிறது. இதன் விலை ரூ. 10 – 00

**நான்காம்பாகம்:** ஸூரத்துல் இஸ்ராஉ முதல் ஸூரத்து நூர் முடிய 8 ஸூராக்களின் தப்ஸீர் நான்காம் பாகமாக வெளிவந்திருக்கிறது. இதன் விலை ரூ. 10 – 00

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

(31-வது பகுதி)

# திருக் குர்ஆன் : : : :
# : : : : சார சங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஷ்மத் பாகவி)

## இஸ்மாயீல் நபியை தியாகம் செய்ய இப்ராஹீம் நபிக்கு தெய்வக் கட்டளை.

(இப்ராஹீம் நபி, தகப்பனர் செய்து வைத்திருந்த விக்கிரகங்களை யெல்லாம் உடைத் தெறிந்து, ஏகதெய்வ வணக்க விவாதம் செய்ததைக் கண்ட தகப்பனர், விக்கிரஹத் தொழும்பனை மன்னனுக்கும் ஊர் ஜனங்களுக்கும் பயந்து, தன் பிள்ளை இப்ராஹீமை ஊரை விட்டே போய் விடுமாறு தூண்டினர். அப்போது இப்ராஹீம் நபி கூறியதே இத்திரு வாக்கியம்:—)

அதற்கு அவர் சொன்னர்: ("தந்தையே,) இதோ நான், என் இரக்ஷகனின் சன்மார்க்கத்தை நாடி, (இவ்வூரை) விட்டு எத்திசையிலாவது போய் விடுகிறேன். அவன் எனக்கு அவசியமாக, நேர்வழி காட்டியருள்வான்" என்று கூறி (விடை பெற்றுக் கொண்டு) "ஏ என் இரக்ஷகனே, எனக்கு ஒரு நல்ல புதல்வனை அளித்தருள்வாயாக" என்று இறைவனைப் பிரார்த்தித்தார்.

அங்ஙனமே (இறைவனுகிய) யாம், (இப்ராஹீமுக்கு) ஒரு பொறுமையுள்ள சத்குமாரன் (இஸ்மாயீல்) பிறக்கப் போகும் நற்செய்தியை (முற்கூட்டியே) அறிவித்துத் தந்தோம். அங்ஙனமே (இப்ராஹீம் நபிக்கு, ஆண் பிள்ளையாகிய இஸ்மாயீல் நபி) பிறந்து வளர்ந்து, நடந்து வரும் நாளில், (ஒரு நாள் தெய்வக் கட்டளை பெற்ற இப்ராஹீம் நபி, பிள்ளையை நோக்கிக்கூறலானர்:-) "மகனே! நானொரு கனவு கண்டேன்; அது, நான் உன்னை (தியாகம் செய்து) அறு(த்து அர்ப்பணி)ப்பது தான்; இதைப் பற்றி நீயும் யோசனை செய்வாயாக. (இக்தக் கனவை செயலில் நிறைவேற்றும் விஷயத்தில்) உன்னுடைய மனக்கிடக்கை யாதென்று எனக்குக் கூறுவாயாக" என்பதாகும். அதற்கு அந்த (அருந்தவப்) பிள்ளை கூறிய பதிலாவது:- "எனதருந் தந்தையே! தங்களுக்கு (கனவில்) இடப்பட்ட கட்டளையை (செயலில்) நிறைவேற்றி வைப்பீர்களாக. ஆண்டவன் நாடினல் (இன்ஷா அல்லாஹ்) நான், பொறுமையாளனுக இருப்பதைத் தாங்கள் (நிச்சயம்) காண்பீர்கள்" என்பதாகும்.

அதன் பின் இருவரும் கட்டளையை நிறைவேற்றுவதில் ஈடு பட்டார்கள். (தந்தையானவர்) பிள்ளையை (அறுத்து குர்பானி செய்வதற்காக) முகம் குப்புற படுக்கப் போட்டார். (கத்தி கொண்டு அறுக்கவும் துணிந்து விட்டார்.) அப்போது (இறைவனாகிய) யாம், இப்ராஹீமை (இரைந்து) கூப்பிட்டுச் சொன்னோம்:— "ஏ இப்ராஹீமே, நீவிர் கனவில் கண்டதை (செயல் படுத்தி) உண்மையாக்கி வைத்தீர். (இதற்காக யாம் உமக்குப் பிரதிபலன் அளிப்போம்.) இவ்வாறு தான் யாம், (வழக்கமாக) நல்லவர்கட்குப் பிரதிபலன் அளித்து வருகின்றோம். உண்மையாகவே, இது பகிரங்கமான ஒரு சோதனையாய் இருந்தது. எனவே, (பிள்ளைக்குப் பகரமாக)யாம் ஒரு பெரிய குர்பானி (ப் பிராணியாகிய செம்மெறியாட்டை)யை இஸ்மாயீலுக்கு காணிக்கையாக்கித் தந்தோம், மேலும் வருங்கால சந்ததியினருக்கு இவர்களின் (தியாகச்) செயலை, புனித ஞாபகமாக நிலைக்கச் செய்து வைத்தோம்.

"எனவே இப்ராஹீம் (நபி) மீது சாந்தி உண்டாகட்டும். மேலும் (இறைவனாகிய) யாம் நல்லடியார்களுக்கு இவ்வாறுதான் பிரதிப் பிரயோஜனம் தருகின்றோம். உண்மையாகவே இப்ராஹீம் (நபி) எம்முடைய பக்தியுள்ள அடியார்களில் உள்ளவரானார்; மேலும் யாம் இப்ராஹீமுக்கு (மற்றொரு குமாரனாக) இஸ்ஹாக்கை பற்றியும் நற்செய்தி தந்தோம். (இங்ஙனமே இரண்டாம் குமாரனாகப் பிறந்த) இஸ்ஹாக்கும், நபியாகவும் நல்லடியாராகவும் விளங்கினார். மேலும் யாம், இப்ராஹீம் மீதும் இஸ்ஹாக் மீதும் எமது அருட் பாக்கியங்களை நன்கு (பொழிந்து) இறக்கி வைத்தோம். அவர்களுடைய சந்ததிகளில் சிலர் உத்தமர்களாக விளங்கினார்கள்; மற்றுஞ் சிலர், (கெட்டு) தங்கள் மீது துலக்கமான அநியாயத்தையே செய்து கொண்டார்கள்."

(ஜுஸு: வமாலிய; ஸூரா: அஸ்ஸாப்பாத்; ருக்கூ:3.)

## இல்யாஸ் நபியும் நாயனின் நல்லடியாராய் விளங்கினார்.

நிச்சயமாக, இல்யாஸும் நபிமார்களில் ஒருவராக விளங்கினார். அப்போது அவர், தம் (சமூக) ஜனங்களை நோக்கி "நீங்கள் ஆண்டவனுக்குப் பயப்பட மாட்டீர்களா? (ஏக நாயனை விட்டு ஏன்) பஃல் என்னும் (விக்கிரஹச்) சிலையை வணங்குகிறீர்கள்; அல்லாஹ்வை ஒரே அடியாய் விட்டுத் தூங்கி விட்டீர்களோ! (அது முடியாது.) அவனே, மகா சிரேஷ்டமான சிருஷ்டி கர்த்தனாக இருக்கின்றான். அல்லாஹ் (தஆலா) உங்களுக்கும் (ஏக) இறைவனாக இருக்கின்றான்; உங்கள் முன்னோர்களான தந்தை, பாட்டன், பூட்டன் மார்களுக்கும் இறைவனாக இருக்கின்றான்" என்று (உபதேசம் செய்து) கூறலானார். (இல்யாஸ் நபி இங்ஙனம் கூறியதைக் கேட்டு) அந்த ஜனங்கள், இல்யாஸை (பொய்யன்என்றுகூறி) நிராகரித்தனர். இதன்காரணமாக அந்த ஜனங்கள், (கியாமத்து நாளில்) பிடித்திழுத்துக் கொண்டு

வரப்படுவார்கள்; ஆனால், அல்லாஹ்வின் நல்லடியார்களாய் இருப்பவர்கள் தவிர; இவர்கள் ரக்ஷிக்கப்படுவார்கள். (இறைவனாகிய) யாம், பின்னைய உம்மத்து (சமூகங்) களிலே இல்யாஸ் நபியைப் பற்றிய நற்பிரஸ்தாபத்தை நிலை பெறுத்து வைத்தோம். இல்யாஸ் மீது சாந்தி உண்டாகட்டும். (ஜனங்களே, யோசித்துப் பாருங்கள்.) இப்படித்தான் நாம், நல்லடியார்களுக்கு பிரதிப்பலன் அளித்து வருகின்றோம். நிச்சயமாக, இல்யாஸ் எம்முடைய நல்லடியார்களில் ஒருவராக இருந்தார். (ஜுஸு: வமாலிய; ஸூரா: வஸ்ஸாப்பாத்; ருக்கூ: 4)

## யூனுவ்ஸ் நபி, மீனால் விழுங்கப்பட்டு 40 நாள் சென்று, தப்பிக் கரை சேர்ந்த வரலாறு.

நிச்சயமாக, யூனுஸ் (நபி-அலை) கூட, தீர்க்க தரிசிகளில் (ரஸூல்களில்) ஒருவராகவே விளங்கினார். (ஆயினும்.) அவர், (சமூக ஜனங்களுக்குப் பயந்து கொண்டு) ஓடிப் போனார்; ஒரு படகில் போய் தஞ்சமடைந்தார். (கவிழும் படகுக்காரர்கள், பெயர்ச்) சீட்டு போட்டுப் பார்த்தனர்; (திருவுளச் சீட்டில் யூனுஸ் நபியுடைய பெயர் தான் வந்தது;) எனவே அவர் (கடலில்) தூக்கி எறியப்பட்டார். உடனே அவரை ஒரு (திமிங்கல) மீன் விழுங்கி விட்டது. (மீன் வயிற்றில் 40 நாள் ஜீவித்திருந்த வண்ணம்) அவர் தன்னைத் தானே நொந்து கொண்டு இருந்தார். (தன் தவறுக்காக வருந்தி பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்.) உண்மையில் யூனுஸ் (நபி), தஸ்பீஹ் செய்து ஆண்டவனைத் தியானித்துக் கொண்டிருப்பவர்களில் (ஒருவராக) இல்லாது போயிருந்தால்-(மரித்துப் போகும்) ஜனங்கள் மீண்டும் உயிர்ப்பெற் றெழுப்பப்படுகிற (கியாமத்து) நாள் வரை அந்த மீனுடைய வயிற்றிலே கிடந்து கொண்டிருப்பார். ஆனால், (அவரது பிரார்த்தனையின் பயனால்) யூனுஸை நாம், (மீன் வயிற்றிலிருந்து உயிரோடே வெளிப்படுத்தி) திறந்த வெளியில் போடப்படச் செய்தோம். (உயிர்த்தப்பிய) அவர், (நாற்பது நாள் மீன் வயிற்றில் புழுங்கி யிருந்ததால்) சோர்வடைந்து கிடந்தார். எனவே நாம் (எம்முடைய பரம சக்தியினால் மிருதுவான) கொடி படர்ந்த செடியை உண்டாக்கி (அவரது சரீரத்துக்கு சுக சௌக்கியம் தந்து, புத்துயிர் அளித்து, ஆரோக்கியமும் உண்டாக்கி) வைத்தோம். அதன் பிறகு (அவருக்கு பூரண ஆரோக்கியமும் பிரதேச வாழ்வும் தந்து) அவரை ஒரு லக்ஷம்—அல்லது அதைவிட அதிகமானவர்களான பெரும் சமூகத்தார்பால் (நபியாக்கி வைத்து) அனுப்பி வைத்தோம். எனவே, (நற்போதனையால்) எல்லோரும் யூனுஸ் நபிக்கு ஈமான் கொண்டார்கள். ஒரு குறிப்பிட்ட காலம் வரை (இறைவனாகிய யாம், உலகத்தில் சுக சௌக்கிய சாதனங்களால்) அவருக்கு பிரயோஜனமுண்டாகச் செய்தோம்.

(ஜுஸு: வமாலிய; ஸூரா: வஸ்ஸாப்பாத்தி; ருகூ: 5.)

## ஸுலைமான் நபியின் அகங்காரத்தை ஆண்டவன் நிவர்த்தித்து வைத்த விசேஷம்

(இறைவனாகிய) யாம், தாவூது (நபி)க்கு, ஸுலைமா (ன் ஆகிய சௌபாக்கியப் புதல்வ)னை அளித்திருந்தோம். அவர் (ஸுலைமான்நபி) எமது நல்லடியார்களில் ஒருவராகவே இருந்தார். எப்போதும் அவர் (எக்காரியத்துக்கும்) ஆண்டவனிடம் (உதவி கோரி) மீளுவார். ஆனால் ஒரு சமயம் அவர் (அகந்தைக் கொண்டு மன அமைதி குலைந்தார். அந்த வரலாறாவது:) ஒரு சமயம் மாலை (அஸர்) நேரம் நெருங்கியபோது, (உயர்தரமான) 'அஸ்பல்' குதிரைகள் அவர்முன், சமர்ப்பிக்கப் பட்டன. (அக்குதிரைகளின் நேர்த்தியையும், அழகையும் பார்த்துக் கொண்டிருப்பதிலேயே மூழ்கியிருந்து விட்டார்; மாலை நேரத் தொழுகையும் தவறிப்போய் விட்டது. அதன் பிறகே அவர், தாம் மாய்கையில் மூழ்கி இறைவனை மறந்து விட்டதை உணர்ந்தார்.) எனவே ஸுலைமான் (நபி) மிகவும் வருந்திக் கூறலானார்:-"(அந்தோ!) நான், என்னுடைய இறைவனுடைய தியானத்துக்கு நிகராக, இந்த (அழகிய குதிரைச்) செல்வத்தின் மீதுள்ள பிரியத்தை நினைத்து, நேசித் திருந்து விட்டேனே; அதோ (சூரியனும்) அஸ்தமித்து ஒளி மறைந்துப் போய் விட்டதே! (தொழுகையை மறந்திருந்து விட்டேனே.")

இவ்வாறு ஸுலைமான் (நபி அகந்தை அழிந்து விவேகம் பெற்று) உணர்ந்து, "அந்தக் குதிரைகளை என் முன் கொண்டு வந்து நிறுத்துங்கள்" என்றார். (அவ்வாறே, அழகிய குதிரைகள் கொண்டு வந்து நிறுத்தப் பட்டன.) ஸுலைமான் (நபி, கோபங் கொண்டு தன் வாளாயுதத்தை குதிரைகளின்) கால்களின் மீதும் கழுத்துகளின் மீதும் செலுத்தலானார் (வெட்டிப் போடலானார்.)

(இறைவனாகிய) யாம், (நபி) ஸுலைமானை, இவ்வாறே மற்றொரு விவகாரத்திலும் சோதனை செய்து (பரீக்ஷித்துப்) பார்த்தோம்.

(அதாவது:- ஸுலைமான் நபிக்கு, எல்லாம் வல்ல அல்லாஹு தஆலா, சகல சுகபோக சௌபாக்கிய சாதனங்களும் கொடுத்திருந்தான். ஆனால் கொஞ்ச காலம் பிள்ளைப் பேறு இல்லாமல், நிர்பாக்கியவானாகவும் இருந்தார். அப்போது அவருக்கு 70-மனைவி மார்கள் இருந்தனர்; இந்தப் பெருமையில் மமதை கொண்டு, 'ஓ! எனக்கென்ன குறை? நான் எல்லா மனைவி யரிடமும் ஒவ்வொரு விடுத்தம் போய் வருவேனானால், எனக்கு 70-குமாரர்கள் பிறந்து விடுவார்கள்' என்று அகந்தையோடு கூறினர். ஆனால் வழக்கம் போல் அவர், "இன்ஷா அல்லாஹ்" (ஆண்டவன் கிருபை செய்தால்) என்று கூறவில்லை: எனவே இறைவனின் கடும் சோதனைக் காளானர். அதாவது:

சில மாதங்கள் கழிந்தன; எழுபது மனைவிகளுக்கும் புத்திர பாக்கியம் ஏற்படுவதற்குப் பதிலாக, ஒரே ஒரு மனைவி மட்டும், ஒரு சபலைப் பிள்ளையைப் பெற்றாள்; அதுவும் பூரண உருவாயில்லாது, குழ குழ வென சதைக் கட்டி போல் கிடந்தது. குடும்ப ஜனங்கள் அதை அப்படியே கொண்டுவந்து, ஸுலைமான் நபியின் சிம்மாஸனத்தில் வைத்து "இதோ, உங்களுடைய, பட்டத்துக் குரிய பாக்கியமான வாரிசைப் பாருங்கள்" என்று ஏளனமாகக் கூறினார்கள். இதைப் பற்றி, ஆண்டவன் பிரஸ்தாபிப்பதாவது:—).

அவருடைய சிம்மாஸனத்தின் மீது ஒரு (சிசுவின்) உதிரக்கட்டி (கொண்டு வந்து) வைக்கப் பட்டது. (இதைக் கண்டு ஸுலைமான் நபி, திக்பிரமை யடைந்து, தன்னுடைய மனக் கேட்டையும் ஒழுக்க ஈனத்தையும் உணர்ந்தார்.) உடனே ஸுலைமான் (நபி) ஆண்டவன் புறத்தில் திரும்பி பணிந்தார்: "ஏ என் இரக்ஷகனே, என்னுடைய பிழையை மன்னித் தருள் வாயாக. எனக்கு (ப் புத்திர பாக்கிய சகிதம்) அரச பாக்கியம் அளிப்பாயாக. எனக்குப் பிறகு யாருக்கேனும், பிராப்தமாகாத முறையில் (சௌபாக்கியம்) அளிப்பாயாக; நீயே, மகா கொடையாளியாக இருக்கின்றாய்" என்று பிரார்த்தனை செய்து (வேண்டிக்) கொண்டார். (இறைவன் அவ்வாறே அருள் பாலித்தான்.)

எனவே, (இறைவனாகிய) யாம், அவருக்கு, (ஆகாயத்தின்) காற்றையும் வசப்படுத்திக் கொடுத்தோம். அவர், செல்ல நாடிய திசையில் காற்று, மெல் லென அவரை சுமந்து போய் சேர்க்கும். மேலும் ஜின்னுத் (என்னும் பூதங்) களையும் அவருக்குப் பணிந்து நடப்பனவாய்ச் செய்தோம். இன்னும் (அபாரமாக) கட்டிடம் கட்டுபவர்கள், (சமுத்திரத்தில் முத்தெடுக்க) மூழ்குபவர்கள், இன்னோரெல்லாரும் அவருடைய அதிகாரச் சங்கிலியால் பிணைக்கப் பட்டிருந்தனர். மேலும் யாம் (ஸுலைமான் நபியை நோக்கி) "இஃதெல்லாம் நாம் உமக்கு அளித்த அருட்பாக்கியங் களாகும். (இதில் உமக்கு பூரண அதிகார மிருப்பதால்) இதைக் கொண்டு நீவிர், பிற ஜனங்களுக்கு (உதவி) உபகாரம் செய்வீராக; அப்படிச் செய்யா திருப்பினும் உம்மிடம் கேள்வி-கணக்கு இல்லை" என்று கூறினோம். உண்மையில் (நபி) ஸுலைமானுக்கு எம்முடைய சமுகத்தில் நெருங்கிய உறவும், உயர் பதவியும் உண்டாயிருக்கின்றன.

(ஜுஸு: வமாலிய; ஸூரா: ஸ்வாத்; ருக்கூ: 3.)

(தொடரும்)

# ஸப்அ ஸனபில்

(ஹனபி மதுஹபுக்குரியது)

இந்த புஸ்தகத்தில் ஏழு புஸ்தகங்கள் அடங்கி யிருக்கின்றன. அவை: (1) ஜஸுருல் முஃமினீன் (2) ஜஸுருல் முஸ்லிமீன் (3) ஜஸுருல் முஸல்லீன் (4) ஜஸுருஸ் ஸாயிமீன் (5) ஜஸுருல் முஜக்கின் (6) ஜஸுருல் ஹாஜ்ஜீன் (7) ஜஸுருத் தாயின்.

இத்துடன் அம்மயத் ஜுஸுலு, ஈடேற்ற மாலை இவைகளும் ஞான ரத்தினக் குறவஞ்சி, ஞான ஆனந்தக் களிப்பு, திருமெஞ்ஞான சாநூல், ஞான கடனம் இவைகளும் சேர்ந்திருக்கின்றன. இதன் விலை ரூ. 3 – 00

# உர்தூ ஆஸான்

தமிழ் தெரிந்தவர்கள் ஆசிரியரின்றி 20 நாட்களுக்குள் உர்தூ பாஷையை பேசவும் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்ள ஏதுவான புஸ்தகம் இது ஒன்றே. இன்றே ஒரு உர்தூ ஆஸான் புஸ்தகத்தை வாங்கி இந்தியாவின் முக்கிய பாஷையாகிய உர்துவைக் கற்றுக் கொள்ளுங்கள்.

உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் 256 பக்கங்களில் அச்சிட்டு அழகிய இங்கிலீஷ் கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.

விலை ரூ. 3–00

புதிய மூன்றும் பதிப்பு

# ஹஸ்ரத் நாகூர் மீருன்ஸாஹிபு ஆண்டவர்கள் காரண சரித்திரம்

இது ஹஸரத் ஸையிது அப்துல் காதிர் ஷாஹுல் ஹமீது மீரூன் ஸாஹிபு ஆண்டவர்களின் ஜீவியமும், அவர்களின் அற்புதமாகிய கறுமத்துகளும் ஒருங்கே நிறைந்தது. இது நேர்த்தியான காகிதத்தில் அச்சிடப்பட்டு அழகான பைண்டு செய்யப்பட்டது. விலை ரூ. 2 – 28

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள்

(((ரஹ்மத் பாகவி)))

( 3 )

## குர்ஆன் (ஓதும்) திலாவத்துக்குரிய ஸஜ்தாக்களைப் பற்றிய ஹதீதுகள்.

* தொழுகைக்கு உள்ளே, அல்லது வெளியே யிருக்கும் போது, 'ஸஜ்தா திலாவத்'துடைய ஆயத்தை யாராவது ஓதினாலும் சரி, அல்லது கேட்டாலும் சரி, ஒரு ஸஜதா செய்ய வேண்டியது ஸுன்னத் ஆகும்.

† இந்த ஸஜ்தாவை ஒலுவுடன் செய்வது மிகவும் நன்மை யாகும். ஆனால் ஒலுவு இல்லாமல் செய்தாலும் நிறைவேறி விடும்; ஜாயிஸ் ஆகும்.

↑ குர்ஆன் ஷரீபில், ஓதினால் ஸஜ்தா செய்ய வேண்டிய 'ஸஜ்தா திலாவத்துகள்' பதினைந்து இடங்களில் ஸுன்னத் ஆகும். அவைகளாவன :—

‡ (1) ஸூரா அஃராபில் கடைசியில் (2) ஸூரா ரஅதில் 'ஆஸால்' என்றதற்குப் பிறகு (3) ஸூரா நஹ்லில் 'யூமரூன்' என்றதற்குப்பிறகு (4) ஸூரா பனீஇஸ்ராயீலில் 'குஷூஅன்' என்றதற்குப் பிறகு (5) ஸூரா மர்யமில் 'புகிய்யா' என்றதற்குப் பிறகு (6) ஸூரா ஹஜ்ஜில் முதல் ஸஜ்தா 'யஷாஉ' என்பதற்குப் பிறகும், (7) இரண்டாவது ஸஜ்தா 'துப்லிஹூன்' என்பதற்குப் பிறகும் (8) ஸூரா புர்கானில் 'நுபூரா' என்பதற்குப் பிறகு, (9) ஸூரா நஹ்லில் 'அல் அளீம்' என்பதற்குப் பிறகு—'யுஃலினூன' என்பதற்குப் பிறகு என்று சிலர் அபிப்பிராயம் (10) ஸூரா அலிப்லாம் மீம் தன்ஸீலில், 'யஸ் தக்பிரூன்' என்பதற்குப் பிறகு (11) ஸூரா ஸ்வாதில் 'மஆப்' என்பதற்குப் பிறகு (12) ஸூரா புஸ்ஸிலத்தில், 'யஸ்அமூன' என்பதற்குப் பிறகு—'தஃபுதூன'வுக்குப் பிறகு என்பது சிலர் அபிப்பிராயம்

---

* மஜாஹிரே ஹக்

† ” ” ”

↑ அபூதாவூத், இப்னுமாஜா, மிஷ்காத்

‡ இப்னுமாஜா, அபூதாவூத், மிஷ்காத், நஸாயீ, புகாரீ, முஸ்லிம்—முதலியன :

(13) ஸூரா வன்னஜ்முவில் கடைசியில், (14) இதஸ்ஸமாவுன் ஷக்கத்தில் 'லாயஸ்ஜுதூன்' என்பதற்குப் பிறகு, (15) ஸூரா அலகில் கடைசியில், ஆக பதினைந்து.

தொழுகைக்கு உள்ளே, தொழுகைக்கு வெளியே இந்த ஆயத்துக்களை யாரேனும் ஓதினாலும் ஓதக்கேட்டாலும், தக்பீர் சொல்லி ஸஜ்தா செய்ய வேண்டும்.

× வாகனத்தில் (ஸவாரியில்) ஏறியிருக்கும் நிலைமையில், யாரேனும் ஸஜ்தாவுடைய ஆயத்தை ஓதினாலும் அல்லது ஓதக் கேட்டாலும் (நின்று) பூமியின்மீது (தரையில்) இரு கரங்களையும் வைத்து ஸஜ்தா செய்ய வேண்டும். நடந்து கொண்டிருக்கும் போதும் (நின்று) பூமியில் (தரையில்) ஸஜ்தா செய்ய வேண்டும்.

‖ நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், ஏதேனும் ஸஜ்தாவுடைய ஆயத்தை இரவில் ஓதினால், அப்போது செய்யும் ஸஜ்தாவில் "என்னுடைய முகம் (சிரசு) யாருக்கு(ப் பணிந்து) ஸஜ்தா செய்ததென்றால், அதைப்படைத்து தன்னுடைய சக்தி கொண்டும் அருள் கொண்டும் அதற்கு தோற்றம் தந்து, காதும் கண்ணும் தந்தானே அவனையே யாகும்" என்ற கருத்துள்ள அரபு துஆவை ஓதுகிறவர்களா யிருந்தார்கள்.

÷ நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், ஸஜ்தாவுடைய ஆயத்துகளை ஓதிய போதெல்லாம், பெரும்பாலும் ஸஜ்தா செய்தார்கள்: ஆனால் சில சமயம் செய்யாமலுமிருந்தார்கள். இதனால் தெரிய வருவது யாதெனில்: குர்ஆனில் வரும் எல்லா ஸஜ்தாவுடைய ஸ்தானங்களும் ஸுன்னத்தானவையே யாகும்; அவை பர்லு மில்லை; வாஜிபு மில்லை.

மற்றபடி, ஸஜ்தாவுக்குரிய உத்தரவெல்லாம் சமமானதே யாகும்.

## (4)

## ஷுக்ருக்காக ஸஜ்தா செய்வது பற்றிய ஹதீதுகள்.

* யாருக்கேனும், ஒரு சந்தோஷமான காரியம் கை கூடி வந்தால், அதற்காக அவர் 'ஷுக்ரு' என்னும் நன்றியறிவுப்புக் குரிய ஸஜ்தாவை நிறைவேற்றவேண்டும்; அந்த ஸஜ்தாவில் நெடுநேரம் சிரம் பணிந்திருந்து, இறைவனைத் துதிக்க வேண்டும். (இதற்குப் பெயர் 'ஸஜ்தாயே ஷுக்ரு' என்று சொல்லப்படும்.)

---

× அபூதாவூத். மிஷ்காத்
‖ அபூதாவூத், திர்மிதி, நஸாயி, மிஷ்காத்
÷ ஸஹீஹைன், மிஷ்காத்
* புலூகுல் மராம்

= நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், தங்களுக்கு ஏதேனும் சந்தோஷமான காரியம் நிகழ்ந்தால், உடனே, ஆண்டவனுடைய சன்னிதானத்தில் ஸஜ்தா செய்து, அதிலேயே வெகு நேரம் பணிந்திருப்பார்கள்.

÷ ஒரு நாள் நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், வெகு நீண்ட நேர ஸஜ்தா செய்தார்கள். அப்புறம் தங்கள் புனித சிரசை உயர்த்தி, "ஜிப்ரயீல் (அலை) என்னிடம் வந்து, ஒரு சந்தோஷமான சமாசாரம் தெரிவித்தார். அதற்காக நான் ஆண்டவனுக்கு நன்றி தெரிவிப்பதற்காக ஸஜ்தா செய்தேன்" என்று திருவுளமானார்கள்.

நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், ஒரு முறை ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களை, யமன் தேசத்துக்கு (இஸ்லாமிய பிரசாரத்துக்காக) அனுப்பி வைத்தார்கள். அங்கு போன பின் ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள், யமன் வாசிகள் பலர் ஈமான் கொண்டு முஸ்லிமானதைப் பற்றி, நிரூபம் எழுதியனுப்பினார்கள். நபிகள் நாயகம் (ஸல்) இந்த சுபச் செய்தியை கடிதத்தில் படித்தறிந்து ஷுக்ருடைய ஸஜ்தா நிறை வேற்றினார்கள்.

‖ ஒரு முறை நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், மக்கா நகரிலிருந்து மதீனா நகருக்குப் பிரயாணப்பட்டு போனார்கள். ஸஹாபா(த் தோழர்)களும் பலர் கூட இருந்தார்கள். வழியில் ஓர் இடம் போய்ச் சேர்ந்ததும், நாயகம் (ஸல்) அவர்கள், வாகனத்திலிருந்து கீழேஇறங்கி, இரு கரங்களையும் உயர்த்தி (இஸ்லாமிய சமூக) உம்மத்துகளுக்காக, பாப மன்னிப்புக்குரிய துஆ கேட்டார்கள். அத்துடன் ஷுக்ருடைய ஸஜ்தாவும் செய்தார்கள். பிறகு, (தோழர்களை நோக்கி) "நான் இறைவனுடைய திருச் சமூகத்தில், எனது சமூகத்தின் பாப மன்னிப்புக்காக வேண்டி பிரார்த்தனை செய்தேன். எல்லாம் வல்ல அல்லாஹ், அதை ஏற்றுக் கொண்டு 'மூன்றிலொரு பங்கு' உம்மத்துக்காக எனக்கருள் புரிந்தான். ஆகையினால் யான் நன்றி யறிவிப்புக்கான ஸஜ்தா செய்தேன்" என்று திருவுளம் பற்றி மொழிந்தருளினார்கள்.

அதன் பின் மேலும் துஆ செய்தார்கள். பிறகு (முன் போல்) ஸஜ்தாவும் செய்து விட்டு "நான் என்னுடைய சமூகத்துக்காக இறைவனுடைய திருப்தியையும் பாப மன்னிப்பையும் கோரி பிரார்த்தனை செய்தேன். இறைவன் எனக்கு, இரண்டாவது 'மூன்றிலொரு பங்கு'

---

= புஹாரி
÷ மராம்
‖ மஸ்னத் இமாம் அஹ்மத், அபூதாவூத், மஜாஹிரே ஹக்

உம்மத்துக்காக எனக்கருள் புரிந்தான். ஆகையால் யான் நன்றி அறிவிப்புக்கான ஸஜ்தா செய்தேன்'' என்று திருவுளமானார்கள்.

அதன் பின்னும் நாயகம் (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள். பிறகு ஸஜ்தாவும் செய்து விட்டு ''நான் என்னுடைய உம்மத்துக்காக வேண்டி ஆண்டவனிடம் மன்னிப்பு கோரினேன். எனவே ஆண்டவன் எனக்கு பாக்கியிருந்த 'மூன்றிலொரு பங்கு' உம்மத்துக்காகவும் எனக்கருள் பாலித்தான்; ஆகையால் நான் ஷுக்ருக்குரிய ஸஜ்தா செய்தேன்'' என்று திருவுளம் பற்றி மொழிந்தருளினார்கள்.

**பாயிதா:** லோக தயாளர் நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், இங்ஙனம் பன்முறையும் தமது உம்மத்தினர்களுடைய பாப மன்னிப்புக்காக துஆச் செய்தார்களே, அது எத்தகைய உம்மத்தினர்க்காகச் செய்தார்கள் என்று கருதுகிறீர்கள்? கொள்கையாலும் செயலாலும் யார், உண்மையான உம்மத்தினராக விளங்குகிறார்களோ அவர்களுக்கேதான். எனவே, ஷிர்க் குபிரான காரியங்களை வெறுத்துக் கொண்டும், சகலவிதமான 'பித்அத்' தான செயல்களை விட்டுப் பேணிக் கொண்டும், ஏக தெய்வக் கொள்கையாகிய தவ்ஹீதை பற்றிப் பிடித்துக் கொண்டும், ரஸூலுடைய ஸுன்னத்தின் பேரில் மகாப் பிரியம் கொண்டும் நடந்துக் கொள்கிறார்களோ அவர்களுக்கே தான். மேலும் மனுஷ்ய இயற்கைத் தன்மையின் பிரகாரம், அறியாமையினால் உலகத் தொல்லைகளில் சிக்கி, பாபச்செயல் புரிந்து விட்டார்களே, அப்படிப் பட்டவர்களுடைய பாப மன்னிப்புக்குத் தான்.

ஆகையினால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இப்படிப்பட்ட உத்தமர்களையே மெய்யான உம்மத்தினராகக் கருதி, அவர்களுக்கு சாதகமாய் பாபமன்னிப்புக்கு துஆ கேட்டு, அந்த துஆ கபூல் ஆய் விட்ட சுபச்செய்தியை அறிந்து, எல்லாம்வல்ல இறைவனுடைய சன்னிதானத்தில், ஷுக்ருக்கான ஸஜ்தாவும் செய்தார்கள். என்னே தயாளம்!

இங்ஙனமிருக்க, ஷிர்க்கான காரியமும் பித்அத்தான செயல்களும் புரிந்து கொண்டுழல்கிறார்களே அவர்கள், 'உம்மத்தே முஹம்மதி' என்று தங்களை சொல்லிக் கொள்ள யோக்யதை உண்டா அவர்களுக்கு? நாயகம் (ஸல்) அவர்கள், 'எங்களுக்காகத்தான் மக்பிரத்துக்கான துஆ புரிந்தார்கள்' என்று உரிமை கொண்டாடுவதற்கு அவர்கட்கு யோக்யதை யுண்டா? இல்லவே இல்லை.

இப்படிப்பட்ட பொய்யர்களுக்கு, ரஸூலுல்லாஹ்வுடைய போதனைக்கு (ரிஸாலத்துக்கு) விரோதமாக நடந்து கொள்ளும் 'போலி உம்மத்' களுக்கு 'பாப மன்னிப்பு' கிடையாதென்றே ஆண்டவனும் கூறுகின்றான். எனவே, வாயளவில் மட்டும் தம்மை 'ரஸூ

ஹுல்லாஹ்வுடைய உம்மத்து' என்று பெருமையாய் சொல்லிக் கொண்டு, செயல் அளவில் வழிகெட் டிருக்கிறார்களே அவர்களை 'அநியாயக்காரர்' என்றும் 'காபிர்கள்' என்றுங்கூட, அல்லாஹு தஆலா, தனது திருக்குர்ஆன் மறையில் எச்சரித் துரைக்கின்றான்:—

(*ஆயத்தின் கருத்துரை) "ஈமான் கொண்ட பிறகும் 'குபிரான' காரியம் செய்கிறார்களே அப்படிப்பட்ட கூட்டத்தினருக்கும், இன்னும் நிச்சயமாக ரஸூல் உண்மையானவரே என்று சாக்ஷியம் சொன்ன பிறகும், அவர்களுக்கு சன்மார்க்க அத்தாக்ஷி வந்த பிறகும், மாறு செய்கிறார்களே அப்படிப்பட்டவர்களுக்கும், ஆண்டவன், எவ்வாறு சன்மார்க்க (ஹிதாயத்) அருள் புரிவான்? ஒருக்காலும் அல்லாஹு தஆலா, அநியாயக்காரரான அந்தக் கூட்டத்தாருக்கு சன்மார்க்கம் அளிக்கவே மாட்டான்" என்பதாகும்.

ஈமான் கொண்டு அதன்படி நடந்து கொள்ளாத கூட்டத்தினர் என்னும் உம்மத்தினரை, 'காபிர்' என்றும் 'லாலிம்' என்றும் ஆண்டவன் கூறியிருக்க, அப்படிப்பட்டவர்களுக்கு அல்லாஹுடைய மக்பிரத்தும், ரஸூலுல்லாஹுடைய ஷபாஅத்தும் எப்படி கிடைக்கும்? யோசிப்பார்களாக * ஸூரா: ஆலஇம்ரான்; ருக்கூ-9. (தொடரும்)


# அறபு த:லீமுல் புர்கான் பீ எஸ்ஸர்னல் குர்ஆன்

இது சிறு குழந்தைகள் அரபி ஓத சுலபமாய் கற்றுக் கொள்ள, புதிய முறையில் எழுதியுள்ள அரபி காயிதா. இதில் ஒவ்வொரு பாடத்திற்கு முன்பும் அந்த பாடத்தைக் குழந்தைகளுக்கு எவ்வாறு கற்றுக்கொடுக்க வேண்டு மென்ற ஒஸ்தாத்மார்களுக்கு குறிப்பும் அறபுத் தமிழில் போடப் பட்டுள்ளது. இதை அழகாக பெரிய எழுத்தில் எழுதி போட்டோ பிளாக் செய்து கிளேஸ் காகிதத்தில் அச்சிடப் பட்டிருக்கிறது. இரண்டு பாகங்களும் சேர்ந்தது.

இதன் விலை நயாபைஸா. 40

எஸ்ஸர்னல் குர்ஆன் லாகூர் ஸ்டைல் பெரியது நயா பை. 64

ஷை சிறியது நயா பை. 40

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்.

கெ. 20 ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ், 5.

# திருச்சி: தப்லே ஆலம் பாஷா இந்தியா விஜயம்

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

தென் இந்தியாவின் ஒரு முக்கிய நகரமாகிய திருச்சிராப்பள்ளியில் ஒரு தர்கா இருக்கிறது. அதை நம் நாட்டார் "நத்ஹர் ஒலி தர்க்கா" என்று சொல்லுகிறார்கள். அதாவது அதில் அடங்கி யிருக்கும் பெரிய நாதாவின் பெயர் 'நத்ஹர் வலீ' என்று சொல்கிறார்கள்.

ஆனால் அந்த மகானின் அசல் பெயர் "ஹஜ்ரத் தப்லே ஆலம் பாத்ஷா" என்பதாகும். சிலர் 'அத்ஹர் வலீ' என்றும், சிலர் 'முதஹ்ஹர் வலீ' என்றும் சொல்கிறார்கள். பொதுவாக நாம், இப்பெருந்தகையாரை வடநாட்டாரைப் போல் 'ஹஜ்ரத் தப்லே ஆலம் பாஷா' என்றே அழைப்போம்.

சென்னை மாகாணம் முழுதும் இம்மகானின் பெயரும் புகழும் பரவி வியாபித்திருக்கிறது. இப்பெரியாரை, பல்லாயிரம் பேர் (முஸ்லிம்கள்) போற்றிக் கொண்டாடி வருகிறார்கள். முஸ்லிம்கள் மட்டுமல்ல, ஹிந்துக்களும் கிறிஸ்துவர்களுங்கூட அம்மகானை 'மகிமையுடையவர்' என்று கொண்டாடி வருகிறார்கள். அவர்கள், அடங்கியிருக்கும் சமாதி ஸ்தலமாகிய தர்க்காவில், ஆண்டு தோறும் 'உருஸ்' கொண்டாடப்பட்டு வருகிறது. அச்சமயம் பல்லாயிரம்பேர் வந்து மகானின் கப்ரை ஜியாரத்துச் செய்து விட்டுப் போகிறார்கள்.

## தப்லே ஆலமின் சொந்த ஊர் எது?

ஷாம், இராக், பலஸ்தீன் முதலிய அரபு நாடுகள் இருக்கின்றனவே அந்தப் பிரதேசங்களுக்கு 'மத்திய கிழக்கு நாடு' (மஷ்ரிகி உஸ்தா) என்று பெயர். அந்த மத்திய கிழக்கு நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள ஓர் இலாக்காவில் (சிற்றூரில்) நம் நத்ஹர் வலியுல்லாஹ் பிறந்தார்கள் என்று நிர்ணயித்துக் கொள்ளலாம். சிலர் அம்மகான், 'இராக்' தேசத்தில் பக்தாதை யடுத்த ஓர் (கர்யா) கிராமத்தில் பிறந்தார்கள் என்றும் சொல்கிறார்கள்.

நத்ஹர்வலி, ஸையிது-ஸாதாத்துகளைச் சேர்ந்தவர்கள். இவர்களது வம்சாவழி தலைமுறையாய்ச் சென்று ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களைச் சேர்கிறது என்றும் சொல்லப்படுகிறது.

## இந்தியாவுக்கு எப்போது வந்தார்கள்?

ஹஜ்ரத் தப்லே ஆலம் பாஷா (நத்ஹர்வலீ) அவர்கள், ஹிந்துஸ்தான் என்னும் இந்தப் பாரத நாட்டுக்கு எப்போது வந்தார்கள்? தென் இந்தியாவுக்கு எப்போது விஜயம் செய்தார்கள்? திருச்சிராப் பள்ளியில் எப்போது வந்து அடங்கினார்கள் என்பதற்கு நாள்-தேதி-மாதம்-ஆண்டு கணக்கான விபரம் ஒன்றும் தெரியவில்லை. ஆனால் அனுமானமாக எதையும் யாரும் சொல்லி விடலாம்.

எனினும் சேர-சோழ-பாண்டிய மன்னர்கள் தென்னாட்டை ஆண்டு கொண்டிருந்த காலத்தில், நம் தென் தேசத்தை நாடி வந்தார்கள் என்று மட்டும் சொல்லலாம். ஏனெனின், அவர்களின் சரித்திர சம்பவ-கராமாத்துகளில், ஓர் (தமிழ்) ஹிந்து ராஜாவுடன் விவாதம் நடந்ததென்று ஒரு வரலாறு காணப்படுகிறது.

## எப்படி வந்தார்கள்?

இராக், ஷாம், மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து தென்னாட்டுத் தமிழ்ப் பிரதேசங்களுக்கு வந்து சேர்ந்து விடுவதென்பது அந்தப் பழங்காலத்தில், சுலப சாத்தியமாய் முடியக்கூடிய காரியமல்ல. ஏனெனில் அக்காலை இந்தியாவுக்கும் அரப் நாட்டுக்கும் கப்பல் போக்குவரத்தும் கிடையாது, தரைப் பாதையில் சவாரி வண்டி வாகனப் போக்குவரத்தும் சௌகர்யமாய் கிடையாது.

ஆனால், அக்காலத்தில் மகா துணிச்சலும், சமுத்திர யாத்திரை அனுபவமு முடைய சில அரபு வியாபாரிகள், பாய்மரப் படகுகளை செலுத்திக் கொண்டே இந்தியாவுக்கு, அராபியக் கடல் பகுதி நாடுகளான மலையாளம், கன்னடம், கூர்ஜரம், இலங்கை முதலிய நாடுகளுக்கு வாணிபம் நிமித்தமாக வந்து பொருளீட்டிப் போவார்கள்.

அந்தப் பழங்காலப் பிரயாசை முறையிலேயேதான், நம் தப்லே ஆலம் பாஷாவும், சமுத்திர வழியாக இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார்கள் என்று ஆராய்ச்சிக்காரர்கள் கூறுவர்.

## ஏடன் வழியாக 'பட்கல்' வந்தார்கள்.

ஹஜ்ரத் தப்லே ஆலம் பாஷா (நத்ஹர்வலீ) அவர்கள், முதலில் தமது ஊரைவிட்டுப் புறப்பட்டு மதீனா முனவ்வராவுக்குப் போய், நபிகள் பெருமானார்-முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது ரவ்லாவில் தங்கி, ஜியாரத்து செய்து விட்டுப் பிறகு, மக்கா முஅல்லமாவுக்குப் போய், ஹஜ்ஜுக் கடமைகளையும் முடித்துக் கொண்டு, அப்புறமே வெளிநாட்டுக்கு (இந்தியாவை நாடியல்ல) புறப்பட்டார்களாம்.

அங்ஙனம் யாத்திரை புறப்படுகையில் முதலில் அதன் (ஏடன்) என்னும் (துறைமுக) ஊருக்கு வந்து சேர்ந்தார்கள். அப்போது அங்கு ஓர் இரவு சயனித்துக் கொண்டிருக்கும்போது நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைக் கனவில் கண்டார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தப்லே ஆலமை உபசரித்து, "நண்பரே, நீவிர் ஹிந்துஸ்தானத்துக்குப் போய் அங்கு எம்முடைய தீனுல் இஸ்லாம் பிரகாசத்தைப் பரத்தி, இஷா அத்து செய்வீராக" என்று திருக்கட்டளை யிட்டார்கள். அந்தப்படி தப்லே ஆலம் (நத்ஹர்) பாஷா அவர்கள், ஏடன் துறைமுகத்தி லிருந்து புறப்பட்ட பாய்மரக் கப்பலில், வேறு சில வியாபாரிகளோடு, ஹிந்துஸ்தான் நோக்கிப் புறப்பட்டார்கள்.

ஏடனிலிருந்து பல நாட்கள் சமுத்திர யாத்திரை புரிந்து, மேற்குக் கடற்கரையிலோர் மலை நாட்டுப் பிரதேச ஊராகிய 'பட்கல்' என்ற இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். பட்கல் என்ற ஊர் தெற்குக் கன்னட பிரதேசத்தைச் சேர்ந்த தாகும். அது மைசூருக்கும் பம்பாய்க்கும் மத்தியில், கடற்கரை யோரம் இருக்கும் மலை நாடாகும். அக் காலத்திலேயே அது அரபு நாட்டுக் கப்பல் யாத்திரிகர்களுக்கு முதல் ஒதுங்கும் தலமாக, இயற்கைத் துறைமுகமாக இருந்து வந்துள்ளதாம்.

## கன்னட ராஜாவின் ஆதரவு.

தப்லே ஆலம் (நத்ஹர் வலி) பாஷா அவர்கள், மேற் கூறப்பட்ட பட்கல் கடற்கரையில் இறங்கி ஊருக்குள் போகாமல், மரங்கள் அடர்ந்த ஒரு தோப்பில் தங்கியிருந்தார்கள். இந்த சமாசாரம் அந்தக் காலத்தில் அந்த ஊரை ஆண்டுக் கொண்டிருந்த கன்னட (ஹிந்து) ராஜாவுக்கு தெரியவந்தது. அந்த ராஜா ஒரு பயந்த சுபாவியாக இருந்ததால், யாரோ அரபு நாட்டுப் போர்வீரர்கள் படையெடுத்து வந்து, முகாம் போட்டிருக்கிறார்கள் என்று பயந்து விட்டான். அவர்களின் நடவடிக்கைகளைப்பற்றி அடிக்கடி ஆள் அனுப்பி தகவல் விசாரித்துக் கொண்டிருந்தான்.

தப்லே ஆலம் பாஷா, பட்கல் கடற்கரையில் சில வாரம் தங்கி, ஜனங்களுக்கு இஸ்லாமிய ஞான போதனைகளை புகட்டிக் கொண்டிருந்தார்கள். இம்மகானின் நற்குண நற்போதனைகளைக் கேள்விப்பட்டு அநேகம் பேர் வந்து தரிசித்து, தங்கள் மனக்கஷ்டமும் நோய் நொடிகளும் நீங்கி, மிகப் பிரயோஜனம் பெற்றுச் சென்றார்கள். பாதி கன்னடமும் பாதி மராட்டியும் பேசும் அந்தப் பிரதேசத்து (ஹிந்து) ஜனங்கள் பலபேர், தீனுல் இஸ்லாமை ஏற்று முஸ்லிமானார்கள்.

இங்ஙனம் தப்லே ஆலம் பாஷா அவர்கள், தம் சீரிய சேவையினால், அந்த நாட்டு ராஜாவுடைய ஆதரவையும் பெற்றுக் கொண்

டார்கள். அதன் விபரமாவது:—அந்த கன்னட ராஜாவுக்கும்—கூடற்கரை ஆரண்யத்தில் வந்து தங்கி பல மகிமைகள் புரியும் மகானை (தப்லே ஆலமை) தரிசிக்க வேண்டு மென்ற ஆவல் ஏற்பட்டது. எனவே, தமது பிரதானிகளில் ஒருவரை தூது அனுப்பி, தப்லே ஆலம் பாஷாவை தமது தர்பாருக்கு வருமாறு கூப்பிட்டு அனுப்பினன்.

'ஆண்டிக்கு அரசன் துரும்பு' என்பதற்கேற்ப, தப்லே ஆலம் அவர்கள் "நான் ராஜனிடம் போக வேண்டிய அவசியம் எனக்கில்லை; தேவையானல் ராஜனே இங்கு வரட்டும்" என்று அஞ்சாமல் சொல்லி அனுப்பிவிட்டார்கள்.

மகா ராஜா, ஆரண்யத்தில் தங்கி யிருக்கும் ஒரு பக்கீரைப் போய் பார்க்க, தர்பாரைவிட்டு புறப்படுவது, ராஜாங்க ரீதிக்கு ஒவ்வாத காரியமாய் இருந்தது. இதற்கு என்ன செய்வ தென்று ராஜாவுக்கும் ஒன்றும் தோன்றவில்லை. (தொடரும்.)


# மிஃருஜுல் ஆரிபீன் பீ தர்ஜுமத்தி மின்ஹாஜில் ஆபிதீன்

(புதிய பதிப்பு)

"மிஃருஜுல் ஆரிபீன்" என்பது பதினன்கு இல்முகளுக்கும் ஓர் அலை கடலாகிய நாயகம் இமாம் கஸ்ஸாலி றஹிமத்துல்லாஹி அலைஹி அவர்கள் இயற்றியுள்ள ஞானநீதக் களஞ்சியமான 'மின்ஹாஜில் ஆபிதீன்' என்னும் கிரந்தத்திலிருந்து வெகு நுட்பா நுட்பமாக மொழி பெயர்த்ததோர் அரிய சாதனமாகும்; அறிவுக்கு ஆகாரமாம். இதில் அடங்கியிருக்கும் 'மஃரிபா' என்னும் தீட்சை ஞானத்தின் பாகுபாடுகளையும், நேர்வழிக்குரிய சாதனத் தெளிவுகளையும், யோகாப்பியாச முறைகளையும் பற்றி விவரித் தெழுதவேண்டுமானல் எவ்வளவு நீடித் தெழுதினலும் முடியாது. கோட்டமிட்ட கண்பர்களுக்கே இதன் அருமை விளங்கும். சுத்தத் தமிழ் கலிகோ பைண்டு விலை ரூ. 4 – 00

ஷை அறபுத் தமிழ் றப்பு காகிதம் கலிகோ பைண்டு (அச்சாகிறது) விலை ரூ. 4 – 40

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# சிறைப் பறவை சிப்கத்துல்லா
## அல்லது
# துப்பு துலக்கிய தூயவர்.

## 12-வது அத்தியாயம்.

கரீம் ஷரீப் பாதி வழி சென்ற பின்னர் தான் அவனது உணர்ச்சிகளை உணர்ந்து கொண்டான். அவனது ஹோட்டலுக்கு அவன் திரும்பிச் சென்றான். அவனுக்காக அங்கு செய்தி யெதுவும் காத்திருக்க வில்லை; எவரும் தேடியும் வந்திருக்கவில்லை. மணி ஏழு. காதர்கான் பொறுமையோடு இருக்கிறானா என அவன் அதிசயித்தான். காதர்கானுக்கு விஷயத்தை விளக்கி எச்சரிக்க வேண்டும். சிப்கத்துல்லா இறந்து விட்டிருப்பான், அல்லது ஆஸ்பத்திரியில் அங்கஹீனனாக இருப்பான்; ஆகவே அவனைப் பற்றி அஞ்சத் தேவையில்லை. தந்திர சாலியான கரீமுல்லாவைப் பற்றியும் பயங் கொள்ளத் தேவையில்லை. எம். எ. ரஜாக்கான் தான் அவனது சிந்தனையை விட்டு அகல வில்லை. கிச்சுக் குரல் கொண்ட அந்த ஆசாமி அபாயகரமானவர்; விஷய ஞான முடையவராகவும் விளங்கினார் அவர். காதர்கானைப் பற்றிக் குறிப்பாக அவர் பிரஸ்தாபித்தது அவனுக்கு அமைதியின்மை அளித்தது. காட்டை விட்டு காதர் கான் வெளியேறி விட வேண்டும். "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" என்பதற்கு ஏற்ப நற்பெயர் இருக்கும் பொழுதே அல்லது கெட்ட பெயர் ஏற்பட்டு போலீஸாரின் கண் காணிப்புக்குள்ளாகாமலிருக்கும் போதே அவன் தப்பி யோடி விடவேண்டும். அவன் அறிவிலியாக இல்லாதிருந்தால் அன்றிரவே அவன் வெளியே சென்று விட்டிருப்பான். இப்போது இது முடியாத காரியம்.

உதகைக்கு கரீமுல்லா கான் போய்ச் சேர வில்லை; அவர் அங்கு சென்றிருந்தால் கரீம் ஷரீபுக்கு, தாம் அமர்த்தி யிருந்த ஆசாமிகள் தகவல் தெரிவித்திருப்பார்கள். ராஜாக் கானைப் பேட்டி கண்டிராவிடில் கரீமுல்லாவைப் பற்றியே கவலைப் பட்டிருப்பான். ஏனெனில் கரீமுல்லாவின் தாமதம் அபாயத்தை அதிகரித்திருக்கும்.

அன்றிரவு எட்டு மணிக்குச் சிறுவனொருவன் செய்தி யொன்று கொண்டு வந்தான். "கரீம் ஷரீபு"க்கு விலாசமிடப்பட்டிருந்த அந்த கடிதத்தின் உறைகைபட்டு அழுக்கடைந்து போயிருந்தது. அறைக்குள் சென்று கதவைப் பூட்டிய பிறகு தான் அந்தக் கடிதத்தை அவன் பிரித்துப் பார்த்தான். காதர் கானின் உதவியாளனும் கல்வி யறிவில்லாதவனும் விஷய முணர்ந்தவனுமான ஒருவனால் அது எழுதப் பட்டிருந்தது.

ஆறு பக்கங்களில் நெருக்கமாக எழுதப்பட்டிருந்தது. தப்பும் தவறுமாக, தாறு மாருக எழுதப்பட்டிருந்த அந்த கடிதத்தை கரீம் ஷரீப் பல தடவை படித்துப் பார்த்தான். இறுதியில் அவனது உள்ளத்தில் பீதி குடி கொண்டது.

"குகைக் குள்ளிருந்து சிப்கதுல்லா உயிரோடு தப்பி விட்டான். ரஜாக்கிடம் விஷயத்தை அவன் சொல்லி விடப் போகிருன்." என்ற அதிர்ச்சி தரும் செய்தியுடன் ஆரம்பித்த அந்த கடிதத்தில் இன்னும் அனேக முக்கிய தகவல் களுமிருந்தன.

கரீம் ஷரீபுக்கு ஒரு ஹோட்டல் தெரியும். அங்கத்தினர் உரிமையைப் பிரயோகிப்பதற்குச் சந்தர்ப்ப மில்லா திருந்த போது கூட அதன் அங்கத்தினர்களிலொருவனுக அவன் பதிவு செய்யப்பட்டிருந்தான். அது மற்ற கிளப்புகளைப் போன்றது அன்று. கட்டிடத்தின் மூன்ருவது, நாலாவது மாடியில் அது இருந்தது; கீழ் மாடிகள் ரெஸ்டாரென்ட் சொந்தக்கார ரொருவருக்குச் சொந்தமாக விருந்தன. நல்ல வியாபாரமாகக் கூடிய ஹோட்டல் சொந்தக் காரர் எவரும் போட்டியாக யிருக்கக் கூடிய கிளப்புக்கு மேல் மாடிகளை வாடகைக்கு விடுவது வழக்கமில்லை. ஆனுல் கிளப் சொந்தக் காரர்களே கட்டிடச் சொந்தக் காரர்களுமாவர். ரெஸ்டா ரென்ட் சொந்தக் காரன் குடிக் கூலிக்கு தான் ஹோட்டல் நடத்தி வந்தான்.

"கிளப் இன்ஸானியத்"தின் அங்கத்தினர் தங்கள் கிளப் வெகு தூரத்தி லிருப்பதையே விரும்பினர். கீழிருந்து மேல் மாடிக்குச் செல்வதற்கு படிக்கட்டுகள் இல்லாதிருந்தது அவர்களுக்குச் சௌகரியமாக விருந்தது. ரெஸ்டாரென்ட் வாசலுக்குப் பக்கத்திலிருந்த குறுகிய பாதை வழியாகவே கிளப் அங்கத்தினர்கள் வந்து போய்க் கொண்டிருந்தனர். அந்த பாதையின் கோடியில் 'லிப்ட்' இருந்தது; அதன் மூலம் அவர்கள் மூன்ருவது மாடிக்குச் சென்ருர்கள். கட்டிடத்துக்கு வெளியே தாராளமாக தப்பியோட வழி இருக்க வேண்டுமென நகர சபை வற்புறுத்தி யிருந்தது. இதுவும் அங்கத்தினர்களுக்கு மிக சௌகரியமாக விருந்தது. விபத்து ஏற்படும் சமயம் தப்பியோடு வதற்கென்று ஏற்படுத்தப் பட்டிருந்த இவ்வழியைச் சில அங்கத்தினர்கள் உபயோகிக்க லானுர்கள். இரகசியமாக இரவு, பகல் எந்த நேரத்திலும் இவர்கள் வந்து போவதற்கு வசதியாக கிளப்புக்கு வழி விடும் ஜன்னலொன்று எப்போதும் திறந்து வைக்கப் பட்டிருந்தது.

கட்டிடத்தின் மேல் தளத்தில் மச்சு வீடொன்று இருந்தது; கிளப் அங்கத்தினர்கள் அதனை ஒரு போதும் உபயோகித்ததில்லை. கிளப்புக்குச் சொந்தமான மற்ருெரு பாகம் அடித்தளமாக விளங்கியது. ரெஸ்டாரென்ட் சொந்தக் காரன் இப்பகுதியைப் பயன் படுத்த அனுமதிக்கப் படவில்லை.

18767.

'லிப்ட்'டிலிருந்து இறங்கி விசாலமான நடை பாதை வழியாக கரீம் ஷரீப் சென்ற போது, பணியாள் மரியாதையாக வணக்கம் செலுத்தினன். 'லிப்ட்'க்குச் சமீபத்தில் மேஜை போட்டு உட்கார்ந்திருந்த அந்த பணியாள், வந்தவனுக்கு வணக்கம் செலுத்தியதற்குக் காரணம் இருக்கத்தான் செய்தது. "கிளப் இன்ஸானி"யத்தின் சொந்தக் காரன் அவன் தான். கரீம் ஷரீப் சிறை வாசம் அனுபவித்த போது அவனது மைந்தன் காதர் கான் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தான்.

எழுந்திருந்து எஜமானர் முன்பு மரியாதையாக பேசாய் நின்ருன் பணியாள்.

"எவராவது இங்கிருக்கிருர்களா?" கரீம் வினவினுன்.

பணியாள் சிலரது பெயர்களை விவரித்தான்.

"தங்கியிருப்போரின் பதிவுப் புத்தகத்தை நான் காண வேண்டும்." என்று கரீம் கூறியதும், மேஜைக்குள்ளிருந்து சிறு, சிவப்பு புத்தகத்தை எடுத்து அவன் முன்பு வைத்தான் பணியாள். பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்த கரீம் திடீரென நிறுத்திக் கொண்டான்.

"ஓஹோ! சரி," அவன் மெதுவாகக் கூறி புத்தகத்தை மூடிப் பணியாளிடம் ஒப்புவித்தான்.

"நீங்கள் யாரையாவது எதிர் பார்க்கிறீர்களா?" பணியாள் வினயமாக வினவினுன்.

"இல்லை, எவரையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்க வில்லை. நான் வியந்து கொண்டிருப்பதெல்லாம்......"

"சின்ன எஜமானர் இன்று மணம் புரிந்து கொண்டார் என்று நான் கேள்விப் படுகிறேன். சிப்பந்திகளனை வரும் அவருக்கு மண வாழ்த்துதல் தெரிவித்துக் கொள்கிருர்கள்......"

உண்மையை உரைக்கு மிடத்து, கிளப் சிப்பந்திகள் அனைவரும் அவனுக்கு மண வாழ்த்து தெரிவித்து அவனை ஆசீர்வதிக்கவில்லை. ஏனெனில், காதர்கானே அல்லது அவனது தந்தை கரீம் ஷரீபோ அவர்களின் நேசத்தைப் பெற்றிருக்க வில்லை. காதர்கானை நேரில் கண்டவர்கள் வெகு சிலரே யாவர்.

"மிக நல்லது, மிக நல்லது" கரீம் ஷரீப் சிந்தனையை எங்கே சிதற விட்டவனைச் சொன்னுன்.

"நீங்கள் இங்கு தானே சாப்பிடப் போகிறீர்கள்?"

"இல்லை, இங்கு நான் சாப்பிடப் போவதில்லை. நான் உள்ளே வந்து பார்த்துப் போகலா மென்று வந்தேன். அவ்வளவு தான்."

அவன் மீண்டும் "லிப்ட்"டில் ஏறிக் கொண்டான்; அவனுடன் "லிப்ட்" கீழே இறங்குவதைக் கவனித்து திருப்தி யடைந்தான் பணியாள். அப்போது மணி எட்டரை. வானம் மப்பும்மந்தாரமுமாக விருந்ததும் வீதிகளில் விளக்குகள் பிரகாசிக்கத்துவங்கியிருந்தன. கரீம் ஷரீப் கம்பீரமாக வீதியில் நடந்து சென்றான்.

அதிர்ஷ்டவசமாக, குறுக்குத்தெரு முனையில் கரீமுல்லாகானைக் கண்டான். வெகு சமீபத்தி லிருந்தபடியால் அவரை நன்கு கவனித்து விட்டு கதவுப்பக்கமாக மறைந்து கொண்டான். சிந்தனையி லாழ்ந்த வராக கரீமுல்லாகான் நடந்து போய்க் கொண்டிருந்தார், அக்கம் பக்கத்தைப் பற்றி அவர் அக்கரை கொண்டதாகவே தோன்றவில்லை. அவரை எதிர்நோக்கி யிருந்த பிரம்மாண்டமான பிரச்சனையில் கவன மும் கருத்தும் செலுத்தி மற்றெதிலும் சிந்தனை செலுத்தாதவராக அவர் சென்று கொண்டிருந்தார்.

கரீம் ஷரீப் வீதி முனைக்கு வந்து அவரை இரகசியமாக கவனிக்க லானான். கிளப்புக்கு எதிர்த்தாற்போல் அவர் சற்று நின்று நிமிர்ந்து பார்த்துவிட்டு நடக்கலானார். கரீம் மனதுக்குள் சிரித்துக் கொண் டான். அன்றிரவு கரீமுல்லாவுக்கு அந்த கிளப் நல்ல மகிழ்ச்சியான நினைவுகளை அளித்திராது. 'கிளப் இன்ஸானியத்' தில் தான் முதன் முதல் ராணுவ காப்டன் உடையில் இருந்த காதர்கானை அவர் சந்தித் தார். 'அபாயகரமான சூழ்நிலையி' லிருந்து அவனை அவர் 'விடுதலை' செய்ததும் அங்குதான். அங்குதான் கரீமுல்லா மீது 'கண்ணி' வீசப்பட்டது. காப்டன் காதிரி வேஷத்தில் இருந்த கள்ள நோட்டுப் பேர்வழி காதர்கான் அறிமுகம் செய்து வைக்கப் பட்டான்.

ஓரிரவு கிளப்புக்குச் சென்றபோது, அங்கு வாலிப ராணுவ உத்தியோகஸ்த னொருவனைக் கண்டார். சூதுவாதுள்ள சூதாட்டக் காரர்களால் சூழப்பட்டிருந்த அவனை அவர்களிடமிருந்து அவர் மீட்டார். 'மீட்கப்பெற்ற' அந்த வாலிபனும் வந்தனம் தெரிவித்துக் கொண்டான், அவரது வீட்டுக்கும் அவன் சென்றான். கரீமுல்லாவைக் 'கண்ணி' யில் சிக்க வைப்பதற்கான முயற்சி முழுவெற்றி யளித்தது. ஆனால் இப்போது காதர்கானை கரீமுல்லாவால் 'கண்ணி' யில் சிக்க வைக்க முடியாது.

இரவின் இருளில் கரீமுல்லாவின் உருவம் மறையும்வரை கரீம் ஷரீப் மறைந்து காத்திருந்தான். காதர்கானுக்கு அபாயம் ஏற்பட் டிருக்கிற தென்பதையும், கள்ள நோட்டு அச்சடிப்பவன் என்று அவன் கைது செய்யப்படும் சாத்யமும் இருக்கிற தென்பதையும் கரீம் கண்டு கொண்டான். எனவே, அன்றிரவு போராட்டத்தை தவிர்க்க முடியாது; வெற்றி அல்லது தோல்வி அன்றே நிச்சயமாகிவிடும். இராக்கால பக்ஷி' ரஜாக்கான், 'சிறைப் பறவை' சிப்கத்துல்லா, கான்

சாஹிப் கரீமுல்லா ஆகிய மூவரும் அவனுக்கு எதிராகக் கிளம்பி யிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒருவரின் நோக்கத்தை மற்றவர் புரிந்து கொள்ள சந்தர்ப்பம் இல்லாதிருக்கின்றனர். ஆனால் கரீம் ஷரீபின் கையில் விலை மதிக்க முடியாத 'பணயம்' மரியமின் ஆன்மா வும் உயிரும் இருந்தது.

அங்கிருந்து அவன் அகன்றதும், அவனுக்கு அறிமுகமான ஓர் அணங்கு அந்த வீதி வழியே வந்து கிளப்புக்குள் பிரவேசித்தாள். 'லிப்ட்' இயக்குவோனின் ஆக்ஷேபத்தையும் பொருட்படுத்தாமல் மேல் மாடிக்குச் செல்ல வேண்டுமென வற்புறுத்தினாள். எச்சரிக்கை மணியின் ஒலியைக் கேட்ட பணியாள், மேலே அவளுக்காக தயாராக காத்திருந்தான்.

"கரீம் ஷரீப் சாஹிப் எங்கே?" அவள் வினவினாள்.

"இப்போதுதான் வெளியே சென்றார்" பணியாள் பதிலளித்தான்.

"இல்லை, பொய் சொல்கிறாய். இப்போதுதான் அவர் சென்றா ரானால் அவரை நான் வழியில் சந்தித்திருப்பேன்."

அவள் உணர்ச்சியால் உந்தப்பட்டவளாகத் தோன்றினாள். பெண்களின் உள்ளக் கிடக்கைகளையும் உணர்ச்சிகளையும் உணர்ந்தோ னான அந்தப் பணியாள் அவளது படபடப்புக்கும் பரபரப்புக்குமுரிய காரணங்களை ஊகித்து உணர்ந்து கொண்டான்.

"இன்றொரு திருமணம் நடந்தது அல்லவா?" தமாஷாவாக அவன் பேச்சுக் கொடுத்தான். "ஜீனத், இப்போது படபடப்புக் கொண்டு பயன் என்ன? நீ இங்கு வந்திருக்கக் கூடாதென்பது உனக்குத் தெரியும். நான் சாஹிபின் வீட்டில் நீ வேலை செய்து கொண்டிருக்கும் வரை உன்னை உள்ளே வரக்கூடாதென கரீம்ஷரீப் சாஹிப் கட்டளை யிட்டிருக்கிறார்."

"கரீம்ஷரீப் சாஹிப் எங்கே?"

"அவர் இப்போதுதான் வெளியே சென்றார் என்று நான் சொல் லிக் கொண்டிருக்கிறேன்...நீ என்ன பெண்ணோ தெரியவில்லை. நம் பிக்கை யில்லா நாரிமணியாக இருக்கிறாயே!"

"அவர் ஹோட்டலுக்குத் திரும்பிச் சென்றிருக்கிறாரா?"

"ஆம், அவர் அங்குதான் சென்றிருக்கிறார். பூங்கொடியே புத்திசாலித் தனமாக நடந்து கொள். எவராவது எப்போதாவது இங்கு வரலாம்...நேற்றிரவு சிப்கத்துல்லா இங்கு வந்தார்; அவர் கரீமுல்லாவின் நண்பரல்லவா?"

"என்னைப்பற்றி சிப்கத்துல்லாவுக்கு எல்லாம் தெரியும். மேலும், கரீமுல்லாவின் வீட்டிலிருந்து விலகி விட்டிருக்கிறேன்."

'லிப்ட்' கதவுக்குச் சமீபத்தில் எவ்வித முடிவுமின்றி நிச்சயமற்ற நிலையில் நின்று கொண்டிருந்தாள் அவள். அவள் துரிதமாக வெளியேற வேண்டுமென்பதற்கான காரணங்களை பணியாள் யோசித்துக் கொண்டிருக்கையில், 'லிப்ட்' டில் ஏறிக் கீழே சென்று விட்டாள்.

'கிளப் இன்ஸானியத்' விநோதம் மிகுந்த கிளப். ஏனெனில் பெரிய விஸ்தாரமான மண்டபம் எதுவும் அதில் இல்லை. தனித்தனியான பதின்மூன்று விருந்து அறைகளும் பெரிய சூதாட்ட அறையுமே கிளப்பின் கட்டிடமாக அமைந்திருந்தன. கீழேயிருந்த ரெஸ்டாரெண்டிலிருந்து உணவு பரிமாறப்படுவது வழக்கம். தனி 'லிப்ட்' மூலம் மேல் மாடியிலுள்ள சிறு அறைக்கு உணவு கொண்டு வரப்படும். கிளப் அங்கத்தினர்களிடையே தோழமை யுணர்ச்சி கிடையாது, அவர்கள் ஒருவரை யொருவர் சந்தித்திருக்கவு மாட்டார்கள். ஆடவரும் பெண்டிரும் கிளப் அங்கத்தினர்களாக இருந்தனர். சாமானிய மக்கள் சந்திக்கும் ஸ்தலமாகவே அது விளங்கியது. தந்திர சாலிகளான அதன் அங்கத்தினர்களிடையே சிக்கிக் கொள்ளும் அப்பாவிகளை அமைதியாக அப்புறப் படுத்துவதற்கான இரகசிய உறைவிடமாகவும் அது விளங்கியது. அதன் அந்தரங்கங்கள் எவ்வளவு தூரம் மறைத்துக் காப்பாற்றப்பட்டன என்பதற்கு உதாரணம் இதுதான்: கரீமுல்லாகானுடன் கொள்ளையில் சம்பந்தப்பட்டுச் சிறை சென்றேனை கரீம்ஷரீப் அதன் சொந்தக்காரன். கரீமுல்லாகானும் இருபது வருடங்களாக அதன் அங்கத்தினராக இருந்தும் இந்த இரகசியத்தை அறியமாட்டார். கரீம் சிறையில் இருந்த காலத்தில் அவனது மைந்தன் காதர் நிர்வாகப் பொறுப்பை மேற்கொண்டு நடத்தி வந்தான் என்பதையும் அவர் அறியமாட்டார். உண்மையை உரைக்குமிடத்து, 'கிளப் இன்ஸானியத்' தில் 'இன்ஸான்' கள் அங்கத்தினராக இருக்கவில்லை. 'இன்ஸான்' (மனிதன்) போர்வை போர்த்திய ஹைவான் (மிருகம்) கள்தான் உறுப்பினராக விருந்தனர். சண்டாளர்களும், சட்டத்துக்கு பயந்து மறைவாக விருப்போருமே அதன் அங்கத்தினர்கள்.

"கிளப் இன்ஸானியத்துக்கு எப்போதாவ தொரு முறைதான் கரீமுல்லாகான் வந்து போவது வழக்கம். "காப்டன் காதிரி" வேஷம் போட்டிருந்த காதர்கானை அவர் முதன்முதலில் சந்தித்த சந்தர்ப்பத்தில் கூட அங்கு அவராகவே வரவில்லை; அவர் அங்கு வருமாறு தந்திரம் செய்யப்பட்டிருந்தது. இந்த இரகசியமும் அவருக்குத் தெரியாது.

ஒன்பதரை மணிவரை பணியாள் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருந்தான். வேலையை முடித்துக் கொண்டு கடிகாரத்தைக் கவனித்தபோது பத்துக்கு இருபத்தைந்து நிமிஷம் இருந்தது. மணி விசையை அவன் முடுக்கினன். வேலைக்காரன் வந்து நின்றான்.

எட்டாம் எண்ணுள்ள அறையில் சூடான தேநீர் கொண்டுபோய் வை" அவன் கட்டளையிட்டான்.

வியப்புடன் விழித்து நின்றான் வேலைக்காரன்.

"எட்டாம் எண்ணுள்ள அறையா?" கண்களையும் காதுகளையும் நம்பமுடியாதவனாக அவன் வினவினான்.

"ஆம், அப்படித்தான் நான் சொன்னேன்" பணியாள் பதில் அளித்தான்.

* * * * * * * * *

காதர்கான் தனியாக உட்கார்ந்து சாப்பிட்டான். அந்த விநோத நிலையை அவனால் ரசிக்க முடியவில்லை: திருமணமான முதல் தின இரவில் மணமகனும் மனைவியும் சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றனர்; அவர்களிருவரையும் மூடப்பெற்ற கதவு பிரித்து வைத்திருந்தது. சமயம் பார்த்துகாத்திருந்தான் அவன்.

இரண்டாவது படுக்கையறையின் சாவித்துவாரத்தில் கருவியை விட்டுக் குடையலானான், பூட்டு திறந்து கொண்டது. அந்தக் கருவியைச் சட்டைப் பையில் திணித்துக் கொண்டான். உள்ளே மேஜை சுத்தம் செய்யப்படும் சத்தம் கேட்டது; அதே சமயம் வெளிக்கதவு மூடப்பட்டு சாவி திருக்கப்படும் ஓசையும் கேட்டது. சிகரேட் பற்ற வைத்துக்கொண்டு சற்று விலகி வந்து ஜன சந்தடியுள்ள வீதியைக் கவனிக்கலானான். சினிமாக் காட்சி முடிவடைந்த சமயம் அது. கார்கள் கனஜோராக பறந்து கொண்டிருந்தன; டிக்கட் கொடுக்குமிடங்களில் நின்றிருந்த நீளமான 'கியூ' வரிசைகளும் மறைந்து விட்டிருந்தன; எதிரிலிருந்த ரெஸ்டாரென்ட் உடனே தீப அலங்காரத்துடன் ஜெகஜ் ஜோதியாக காட்சி அளித்தது.

வீதியில் அவன் கண்ணோட்டம் செலுத்தியபோது, அவனது பாதுகாப்புக்காக கரீம் ஷரீப் அமர்த்தியிருந்த ஆசாமிகளிலொருவனை அவன் அடையாளம் கண்டு கொண்டான்.

தனது அறைக்குத் திரும்பி, மரியமின் அறைப்பக்கம் சென்றான்.

"மரியம்" மிருதுவான தொனியில் அவன் அழைத்தான்.

பதில் இல்லை. ஜன்னல் கதவைத் தட்டினான். "மரியம் சற்றுவா, உன்னுடன் பேச விரும்புகிறேன், கதவை நீ திறக்க வேண்டிய அவசியமில்லை. உன்னிடம் ஒரு விஷயம் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்"

இப்போதும் பதில் கிடைக்கவில்லை. கதவைத் தள்ளிப் பார்த்த போது அது பூட்டப்பட்டிருப்பது தெரிந்தது.

நீ உள்ளே இருக்கிறாயா? காட்டமாக அவன் வினவினான். ஆனால் அவள் பதில் அளிக்கவில்லை.

சட்டைப் பையிலிருந்து கொறடாவை எடுத்து சாவித்துவாரத்தில் புகுத்துத் திருகினன். கதவைப்படாரென தள்ளிக் கொண்டு உள்ளே விரைந்தான்.

அறை காலியாக விருந்தது; பெரிய ஸ்கான அறையும் காலியாகக் கிடந்தது. கடைமுற்றத்துக்குச் செல்லும் கதவுப்பக்கம் ஓடினன். வெளிப்பக்கத்திலிருந்து அது பூட்டப்பட்டிருந்தது. வேர்க்க வியர்க்க அவன் வெளியே ஓடி வந்தான். அவன் கண்களில் முதலில் தென்பட்டவன் வேலைக்காரன்.

"அம்மாவையா பார்க்கிறீர்கள்? அவர்கள் சற்று முன்புதான் வெளியே போனர்கள்."

வெளியே போனளா? முட்டாள், நீ பார்த்துக் கொண்டிருந்தாயா? எங்கு?"

"எனக்குத் தெரியாது. அவர்கள் இப்போதுதான் போனர்கள். கடைமுற்றத்தின் வழியாக அவர்கள் சென்றபோது நான் பார்த்தேன்"

தொப்பியை எடுத்துக்கொண்டு, மும்மூன்று படிகளாகத் தாவி காதர் கீழே சென்றுன். வரவேற்பு குமஸ்தாவும் அவள் வெளியே சென்றதைக் கவனிக்கவில்லை, மற்ற வேலைக்காரர்களும் பார்க்கவில்லை. உடனடியான அபாயத்தைப் பற்றிச் சிறிதும் சிந்தியாமல் தலைதெறிக்க தெருவுக்கு ஓடிச் சுற்றுமுற்றும் பார்த்தான்.

கரீம் ஷரீபால் அங்கு நிறுத்தப்பட்டிருந்த ஆசாமியைக் கூப்பிட்டு விசாரித்தான்.

"இந்த வழியாக அம்மா வரவில்லை. அடுத்த வீதியில் மற்றொரு வழி இருக்கிறது அங்கு நமது ஆசாமி கவனித்துக் கொண்டிருக்கிருன்"

அடுத்த வீதியிலிருந்த இரண்டாவது ஆசாமியும் மரியமைப் பார்க்க வில்லை யென தெரிவித்துக் கொண்டான்.

ஹோட்டலுக்குத் திரும்பி மானேஜரை காதர் கண்டு விசாரித்தான்.

"வேறு எந்த வழியும் கிடையாது. சாமான்கள் கொண்டு செல்லும் படிக்கட்டுவழியாகச் சென்றிருக்கலாம்"

"அந்த தடித்த வேலைக்காரப் பெண்தான் காரணம். அவள்யார்? அவளை நான் பார்க்கமுடியுமா?"

"இன்று பிற்பகல் வேலையை முடித்துக் கொண்டு அவள் சென்றுவிட்டாள். நான் ஏதாவது செய்ய முடியுமா? ஒரு வேலை உலவுவதற்காக அம்மா வெளியே சென்றிருக்கலாம். உதகைக்கு அவர்கள் இதற்கு முன்பு வந்திருக்கிறர்களா?"

பதிலளிக்காமல் மாடிக்கு காதர் விரைந்தான். தனது அறைக்குச் சென்று அவசரமாகச் சோதனையிட்டான். படுக்கை யறைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்த ...ரியமின் உடைப் பெட்டியைக் காண வில்லை. தரையில் கிடந்த வொ... று அவனது கவனத்தைக் கவர்ந்தது. கோட்டுப் புத்தகத்திலிருந்து ...தித்தெடுச்கப் பட்ட காகிதம் அது. அதில் சில வார்த்தைகள் கிறுக்...ப்பட்டிருந்தன. அதன் வாசகத்தைப் படித்துப் பார்த்தபோது கண்களில் ஒளி ஏற்பட்டது. அந்த மடித்த நசுங்கிய காகிதத்தை சட்டைப் பையில் திணித்து கொண்டான். தனது அறைக்குச் சென்று சாய்வு ...ாற்காலில் அமர்ந்து வெகுநேரம் சிந்தித்தான்.

கண்களிலேற்பட்டிருந்த ஒளி ம...ங்கி விட்டது, அவன் அவசரமாக எழுந்தான்.

"எட்டாம் எண்ணுள்ள அறை" ...வன் கூறிக்கொண்டான். "எட்டாம் எண்ணுள்ள அறையில் இன்...ரவு சில வியக்கத் தக்க விஷயங்கள் நிகழவிருக்கின்றன"

(தொடரும்)


# லைலா மஜ்னூன்

அரபு தேச சர்தாருடைய அருமைக் குமாரனாகிய மஜ்னூ னென்னும் வாலிபன், அழகில் சிறந்த லை...ா என்னும் ஒரு பெண்ணரசி பேரில் காதல் கொண்டு, ஒருவரை யொருவர் நேசித்து பல துன்பங்களுக்கு இலக்காகி, இறுதியி... சந்திக்கும் வரை நடந்துள்ள சரிதை இது. இது உர்து பாஷையில் லைலீ மஜ்னூ னென்னும் பெயர் பெற்ற காவியமாக விளங்கி வந்ததை தமிழ் பாஷையில் மொழி பெயர்த்து அருமை...ான நாவலைப் போல் வசன ரூபமாய் அமைக்கப்பட்டிருக்கி...

விலை ரூ. 1 –

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்.
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ், 5.


Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

(8)067 ...600 005.

# ஹஸ்ரத் ஆயிஷா நாயகி அவர்களின் ஜீவிய சரித்திரம்

ஆயிஷா நாயகியின் வம்ச பா பரையும், குழந்தை பருவமும், கதீஜா நம்பிராட்டியாரின் வபாத்தும், ஆயிஷா நாயகியின் திருமணமும், மஹர் (வி ாக கட்டணம்) விபரமும், நபி பெருமானார் ஹிஜ்றத்து செய்தல், ஆயிஷா நாயகி மதீனாவுக்குப் போதல், சீதனச் மான்களும், வலிமா விருந்தும், ஆயிஷா நாயகியின் குடித் ஆரம்பமும், பொம்மை விளையாட்டும், ஆயிஷா நாய பால் ரஸூலுல்லாவின் அன்பும், ஆயிஷா நாயகியின் ாக்கும், நீதி நெறிகளும், சமத்துவமும் மேன்பாடும், கல் த் திறமையும், பெருந் தன்மையும், தர்ம குணமும், உபசார நிலைமையும், ஆண்டவனிடத்து பயமும், வணக்கமு தம் வீட்டுக் காரியங்களைத் தாமே செய்து கொள்ளும் குணமும், துப்புரவான சுபாவமும், கணவருக்கு கீழ்படிந்து நடத்தலும், கோஷா நாகரீகமும், அணியும் உடையின் தன்மையும், ஸ்திரீகளுக்கு பைஅத்து கொடுத்தலும், ஒழுக்க கருத்தோடு பேசும் திருமொழிகளும், விபரமாய் கூ ப்பட்டிருப்பதோடு முஸ்லிம் சகோதர சகோதரிகளுக்கு அளவற்ற போதனைகளும் குவிந்திருக்கின்றன.

கிளேஸ் காகிதம் இதன் விலை ரூ. 1 – 56

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 4 – 00

ஷை ஹஜ்றத் கதீஜா நாயகி, பாத்திமா நாயகி, ஆயிஷா நாயகி, ஆக மூன்று நாயகிகளின் ஜீவிய சரித்திரம் ஒரே கட்டடம் லிகோ பைண்டு விலை ரூ. 4 – 00

ஷை 3 நாயகிகளின் ஜீவிய சரித்திரம் அரபுத் தமிழ் இதன் விலை ரூ. 8 – 00

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

28

# தாரீகுல் குலபா

## இஸ்லாமிய கலீபாக்களின் அரசாங்க சரித்திரங்கள்

நமது இஸ்லாமிய கலீபாக்களின் சரித்திர விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது எல்லா முஸ்லிம்களுக்கும் அத்தியாவசியமான கடமையாகும். ஏனெனில் இச்சரித்திரங்களில் இஸ்லாமின் ஆரம்பமும், இஸ்லாத்தை நிலை காட்டிய தத்துவங்களும், இஸ்லாத்தின் பக்தி விசுவாசங்களும், இஸ்லாத்தின் சமத்துவங்களும், இஸ்லாத்தின் நீதி பரிபாலனங்களும் ஒருங்கே நிறைந்திருக்கின்றன. ஆதலின், இம்மகிமை பொருந்திய சரித்திரங்களை ஒவ்வொரு முஸ்லிமும் முஸ்லிம் அல்லாதாரும் அவசியம் வாசிக்க வேண்டும்.

இதில் முதற் பாகமாக நம் நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சரித்திரமும், முதல் கலீபாவாகிய ஹஸரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரமும் அடங்கியது. கிளேஸ் காகிதத்தில் கிரௌன் 8-பேஜ் ஸைஸில் அச்சிடப்பட்டு பைண்டு கட்டியது. விலை ரூ. 1 – 60

மேற்படி இரண்டாவது பாகம்: இதில் ஹஸரத் உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரம் விரிவாய் எழுதப் பெற்றது. விலை ரூ. 1 – 32

மேற்படி மூன்றும் பாகம்: இது ஹஸரத் உஸ்மான் (றலி) அவர்களின் கிலாபத்தும், ஹஸரத் அலி (றலி) அவர்களின் கிலாபத்தும், ஹஸரத் இமாம் ஹஸன் (றலி) அவர்களின் கிலாபத்தும், பனீ உமையாவின் கிலாபத்தும், அப்துல் மலிக் அவர்களின் கிலாபத்தும் ஆக 5-கிலாபத்து ஆட்சி வரலாறுகள் அடங்கியது விலை ரூ. 1 – 32

மேற்படி மூன்று பாகமும் சேர்ந்தது விலை ரூ. 3 – 60

---

கிடைக்குமிடம் :—

**ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.